விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 076 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை (05.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஏப்ரலில் தேர்தல் இடம்பெற வாய்ப்பு

### சன்ன ஜயசுமன

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 07 அல்லது 08 ஆம் திகதிகளில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்களின் அடிப்படை வாக்குரிமையை உயர் நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை 19

### பொருளாதார மீட்சிக்கு ஒத்துழைப்பு

## இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்

### அலி சப்ரியிடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு

(ஹைதராபாத்)

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் 19

### தேர்தல் தொடர்பாக

# நீதிமன்ற தீர்ப்பை செயற்படுத்துவோம்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி செயற்படுவோம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 2023ஆம் ஆண்டு தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் 19

## கைதடியில் ஹயஸ் வாகனம் கடத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் ஹயஸ் வாகனம் ஒன்று கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விற்பனைக்காக நின்ற ஹயஸ் வாகனத்தை ஓடிப் பார்ப்பதாக உரிமையாளரிடம் தெரிவித்துவிட்டு வாகனத்தை கடத்திச் 19

## பளை இத்தாவிலில் வெடி பொருட்கள் மீட்பு

(பளை)

பளை இத்தாவில் பகுதியில் ஒரு தொகை வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் வீடு ஒன்றின் முற்றத்தில் பச்சை நிற சீருடை துணி ஒன்றினை வீட்டு உரிமையாளர் அவதானித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இடத்தில் தோண்டியபோது வெடி பொருட்கள் இருப்பதை அவதானித்தனர்.

உடனடியாக இது தொடர்பில் பளை பொலிஸ் 19

## கச்சதீவு உற்சவம் நிறைவு



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

கச்சதீவு புனித 19

## திகதி குறிப்பிடாமல் தேர்தலை பிற்போடுவதற்கு சதித் திட்டம்

### பஃவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திகதி குறிப்பிடாமல் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்காக அரசாங்கம் மிகவும் மோசமான முறையில் தலையிட்டு வருகிறது என பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி 19

PAFFREL

### வட்டி வீதம் உயர்வு

## மத்திய வங்கியின் முடிவுக்கு நாணய நிதியம் பாராட்டு

(கொழும்பு)

கொள்கை வட்டிவீதங்களை அதிகரிக்கும் இலங்கையின் தீர்மானத்துக்கு, சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது பணவீக்கத்தை குறைப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக, இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் மற்றும் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலை 19

### கரவெட்டியில்

## இளம் பெண் சடலமாக மீட்பு



19

### தேர்தல் தொடர்பில் கலந்துரையாட

## தேர்தல்கள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

தேர்தல் தொடர்பில் கலந்துரையாட நிதி அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் மற்றும் அரச அச்சகர் உள்ளிட்ட அதிகாரிகளை மீண்டும் ஆணைக்குழுவிற்கு அழைக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வாரத்தில் அவர்களை அழைக்க எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு கூறியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒன்றரை பில்லியன்களை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்காக ஒன்றரை பில்லியன் டொலர்களை வழங்குவதற்கு உலக வங்கியின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கிடையில் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்டின் ரைஸர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய தன் பின்னர், பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க உள்ளிட்டோரையும் சந்தித்து இந்த இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, அதன் முதல் பாகம் உடனடியாக வழங்கப்படும் என உலக வங்கியின் பிரதிநிதிகள் இதன்போது உறுதியளித்துள்ளனர். (ம-7)


## அலுவலக உதவியாளர் லொத்தர் ரிக்கட் விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாண மாவட்டத்தின் ரிக்கெட் விற்பனைக்கு விற்பனை உதவியாளர்கள், அலுவலக பணியாளர் தேவை. தொடர்புகளுக்கு :

**077 122 8841 | 075 881 0010**

வைத்தீஸ்வரா சந்தி, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (14801)

## சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா விசாவும் மற்றும் சகல நாடுகளுக்குமான Student Visa வும் தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**Hybrid International Hub (pvt) LTD** (C-6104)

**076 250 0098 / 021 222 1265**

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 15.07.1948



மறைவு 05.02.2023

கடந்த 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சோமசுந்தரம் நாகம்மா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 05.03.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகைபுரம் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (07.03.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

மகன் : சோ.கேதீஸ்வரன் (ஈகிள் ஹாட்வெயார் - யாழ்ப்பாணம்)

மகன் : சோ.ஜெகதீஸ்வரன் (சிற்றி ரான்ஸ்போட் - கொழும்பு)

மகன் : சோ.பிரகதீஸ்வரன் (சிற்றி ஹட்வெயார் & ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்)

இல.87/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 222 8678 (C-6101)


# இது தேர்தல் காலம் அல்ல

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர

(கொழும்பு)

நாட்டின் நிலைமையைத் தெரிந்து கொண்டும் தேர்தல் வேண்டும் என்று சிலர் பிடிவாதமாகச் செயற்படுகின்றனர்.

இது தேர்தல் காலம் அல்ல. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நேரமே இது. என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தற்போது தேர்தலை நடத்தக் கூடிய நிலைமை இல்லை என்று தெரிந்தும் கூட சிலர் தேர்தல் வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர்.

இப்போது தேர்தல் நடக்காது என்ற துணிவில்தான் அவர்கள் இவ்வாறு பிடிவாத மாகச் செயற்படுகின்றனர். முதலில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவோம். அதன்பின்னர் தேர்தலை நடத்துவோம் என தெரிவித்துள்ளார். (ம-7)

# கடத்தப்பட்ட ஒன்றரைமாத குழந்தை மீட்பு

பம்பலப்பிட்டி பகுதியில் யாசகம் எடுக்கும் பெண்ணிடம் இருந்து கடத்தப்பட்டதாக கூறப்படும் ஒன்றரை மாத குழந்தை புத்தளம் வனாத்த வில்லுவ பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குழந்தையை அழைத்துச் சென்றதாக கூறப்படும் 53 வயதுடைய பெண் மற்றும் குழந்தையின் தாய் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# யாழ்தேவி தடம்புரள்வு

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த யாழ்தேவி புகையிரதம் நேற்று தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. மஹவ புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரதத்தின் பெட்டி ஒன்று மோதியுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த புகையிரத பெட்டியை மீண்டும் தண்டவாளத்தில் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)


## மணமகள் தேவை

பருத்தித்துறை புலோலியைப்பிறப்பிடமாகவும் லண்டனை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்துப் பெற்றவருக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

பிறந்ததிகதி - 19.09.1981, நட்சத்திரம் - கார்த்திகை, தகைமை - Jaffna BSc, London MSc

தொழில் - லண்டனில் சொந்த வியாபாரம்.

தொடர்புகளுக்கு:

077 110 7624 | 078 303 5181

Viber | WhatsApp (14805)

## வீடு பராமரிக்க வேண்டுமா?

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் சிறந்த முறையில் பாதுகாப்பாக உங்கள் வீடுகளை பராமரித்து தருகின்றோம்.

தொடர்புக்கு :-

**076 962 9374** (14802)

## காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒன்று மற்றும் இரண்டு பரப்புக் காணிகள் விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

**077 656 3582** (14796)

## காணி விற்பனைக்கு

ரவி கராஜ் அருகாமை சாந்தசோலை வீதி, பூந்தோட்டம் எனும் முகவரியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (14796)

தொடர்புகளுக்கு

**077 656 3582**

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling

அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,

பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி

சனி, ஞாயிறு புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

[illegible] புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-6100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ/த மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு தாமதமாவதால், பரீட்சார்த்திகள் பாரிய அநீதிக்கு உள்ளாகி வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சர் முன்மொழிந்த கொடுப்பனவுகளில் இருந்து ஆயிரம் ரூபாவைக் குறைக்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தரப் பரீட்சை முடிவடைந்து 2 வாரங்கள் கடந்துள்ள போதிலும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை.. கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு நாளாந்த கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

உயர்தர விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு மார்ச் மாதம் 8 ஆம் திகதி வரை இணையவழி ஊடாக மேற்கொள்ளப்படும். என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (4)

# உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி திசாநாயக்க?

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி. திசாநாயக்கவை பதவியேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்குப் பதிலளித்த திஸாநாயக்க, உயர்கல்வி அமைச்சுப் பதவியுடன் கல்வி அமைச்சுப் பதவியும் ஒன்றாக இருப்பது விரும்பத்தக்கது என குறிப்பிட்டுள்ளார். (4)

# சகல புலனாய்வு தகவல்களையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம்

**(கொழும்பு)**

**இலங்கைக்குக் கிடைக்கப் பெறும் சகல புலனாய்வு தகவல்களையும் அமெரிக்காவுடன் பகிர்ந்துக் கொள்ளும் வகையில் 'புலனாய்வு தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம்' ஒன்றை ஸ்தாபிக்க அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் கூட்டணி காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வந்த அமெரிக்காவின் சி.ஐ.ஏ பிரதானி வில்லியம் பேர்ன் உள்ளிட்ட 22 பேர் அடங்கிய குழுவினர் இலங்கையின் தேசிய பாதுகாப்பை பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் நான்கு பிரதான நிபந்தனைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக அவர் கூறினார்.

அதில், இலங்கைக்கு கிடைக்கப் பெறும் சகல புலனாய்வு தகவல்களையும் அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் புலனாய்வு தகவல் பரிமாற்றல் மத்திய நிலையம் ஒன்றை ஸ்தாபித்தல், இரண்டாவது விஞ்ஞான பூர்வ குடியகழ்வு கட்டுப்பாட்டு முறைமையை இலங்கை விமான நிலையங்களில் ஸ்தாபித்தல், மூன்றாவது இலங்கையுடன் தொடர்புகளை மேற்கொள்ளும் வெளிநாட்டுத் தொலைபேசி வலையமைப்பு தொடர்பான தகவல்களை அமெரிக்காவுடன் பகிர்ந்துகொள்ளல் மற்றும் சோபா ஒப்பந்தத்தை விரைவாக கைச்சாத்திடல் உள்ளிட்ட நான்கு பிரதான நிபந்தனைகளை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக கம்மன்பில தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட இந்த நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# இந்தியா செய்த உதவி போல் ஏனைய நாடுகள் செய்யவில்லை

## வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி



(கொழும்பு)

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு உதவுவதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நன்றி தெரிவித்தார்.

புதுடில்லியில் இடம்பெறும் ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் மீட்பு மற்றும் நிலைப்படுத்துதலின் மிகப்பெரிய பங்காளியாக இந்தியா உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கைக்கு செய்த உதவிகளை ஏனைய எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து கூட செய்யவில்லை என தாம் நினைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியா 3.9 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் வரியை இலங்கைக்கு வழங்கியது. எனவே இலங்கை, இந்தியாவிற்கு மிகவும் நன்றியுள்ள நாடாக இருக்கின்றது என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடு இந்த மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதிய உதவித் திட்டத்தை எதிர்பார்க்கின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# ஆபிரிக்காவிற்கு அடுத்து வன விலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கை

(கொழும்பு)

ஆபிரிக்காவிற்கு வெளியில் வனவிலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கை உள்ளதாக பிரபல ஃபோர்ப்ஸ் சஞ்சிகை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை தனது தனித்துவமான சுற்றுலா சலுகைகள் மற்றும் இயற்கை அழகு காரணமாக தொடர்ந்து பலரதும் கவனத்தை ஈர்த்து வரும் நிலையில், ஃபோர்ப்ஸ் சஞ்சிகையின் இந்த தரப்படுத்தல் அமைந்துள்ளது.

உலக நாடுகளில் சிறுத்தைகளின் அடர்த்தியான பரம்பலைக் கொண்ட இடமாகவும் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளை விடவும் மிகச் சிறந்த பூனை இனங்களைக் கொண்ட இடமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக ஃபோர்ப்ஸ் குறிப்பிட்டுள்ளது.

ஆசிய யானைகள், மயில்கள், நீர் எருமைகள், குரங்குகள் மற்றும் தேன் உண்ணி கரடிகளை அதிகம் கொண்ட தேசமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேனப் கோடில் இருந்து டொமினிக்கன் குடியரசு வரை திமிங்கலங்களை பார்க்கக் கூடியதாக இருந்தாலும், இலங்கையில் மாத்திரமே எளிதில் நீலத் திமிங்கலங்களை காண முடியும் எனவும் தெரிவித்துள்ளது. (4)

# தவிசாளர் பதவியிலிருந்து ஜி.எல்.பீரிஸ் நீக்கம்

## மொட்டுக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸை தமது கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது.

நிறைவேற்றுக்குழு கடந்த வாரம் கூடிய போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது என மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.



இதன்படி, புதிய தவிசாளர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன எனவும் அவர்களில் ஒருவர் விரைவில் தெரிவு செய்யப்படுவார் எனவும் அவர் கூறியுள்ளார். (4)

# நாட்டில் மரக்கறி விலை வீழ்ச்சி

(கொழும்பு)

மரக்கறிகளின் விலையில் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அதிக விலையில் காணப்பட்ட போஞ்சி விலை 250 ரூபாவிற்கும் குறைவான மதிப்பை பதிவு செய்தது.

இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு 120 ரூபாவாகவும் வெனிமடை உள்ளூர் உருளைக்கிழங்கு 200 முதல் 210 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலை 95 முதல் 100 ரூபாய் வரை காணப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளது. (4)

# வட்டி வீதங்களை அதிகரித்தது இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி அதன் நாணய கொள்கையில் வட்டி வீதங்களை உயர்த்துவதற்கு தீர்மானித்துள்ளது. இந்த வட்டி விகிதங்கள் நேற்று முன்தினம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, நிலையான வைப்பு வட்டி வீதம் 15.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியினால் கடனுக்காக அறவிடப்படும் வட்டி வீதம் 16.5 வீதமாக அதிகரிக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் பணவீக்கத்தை மேலும் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்த வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படுவதாக மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் மாலை பாடசாலை அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் இடம்பெற்றது. (படம்-ஜோசப்நயன்)



யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் க.தவசீலன் தலைமையில் நடைபெற்றது. (படம்- கஜிந்தன்)

# வீரர்களின் போர் சமநிலையில் முடிவு

யா/மகாஜானக் கல்லூரிக்கும் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே வருடா வருடம் நடைபெறும் "வீரர்களின் போர்" என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டியின் 21 ஆவது போட்டி இவ்வருடம் ஸ்கந்தா மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இரு நாள்களைக் கொண்ட இப்போட்டி நேற்று சனிக்கிழமை வெற்றி - தோல்வி இன்றி நிறைவடைந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தா முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்ய, மகாஜனா முதலில் துடுப்பெடுத்தாடியது. 46.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 107 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது மகாஜனா. சுமிஸ்கரன் 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஸ்கந்தா சார்பில் 15 ஓவர்களை வீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த கயானன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் 49 ஓவர்களை எதிர்கொண்டு 7 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிகூடிய ஓட்டங்களாக வசீகரன் 43 ஓட்டங்களைப் பெற்றுக்கொண் டார். மகாஜனா சார்பில் 14 ஓவர்களை வீசி 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்த துவார கன் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நேற்று ஆட்டத்தை தொடர்ந்த ஸ்கந்தா 81.5 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. வசீகரன் 43 ஓட்டங்களையும் ஸ்ரெபான் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் மகாஜனா சார்பில் பந்துவீச்சில் தூவாரகன் நேற்று மேலும் 1 விக்கெட்டைக் கைப்பற்றி 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். யோவெல் றொசான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.




தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸிற்காக 74 ஓட்டங்கள் பின்னிலையில் துடுப்பெடுத்தாடிய மகாஜனா 65 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை நிறுத்தி 223 ஓட்டங்களை குவித்தது. மகாஜனா சார்பில் துடுப்பாட்டத்தில் அபர்ணன் 81 ஓட்டங்களை பெற்றார். துவாரகன் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றார். ஸ்கந்தா பந்துவீச்சில் கயானன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.(ம-7,105)

# இந்திய அணியின் தோல்விக்கு ஜடேஜாவே காரணம்- கவாஸ்கர்

இந்தியா - அவுஸ்திரேலியா இடையேயான 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் இந்திய அணி அபார வெற்றி பெற்ற நிலையில், 3 ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி அபாரமாக ஆடி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தூர் ஆடுகளம் முதல் ஓவரிலிருந்தே ஸ்பின்னிற்கு சாதகமாக இருந்தது. இந்திய வீரர்கள் அவுஸ்திரேலியா ஸ்பின் பவுலிங்கை திறம்பட ஆடமுடியாமல் திணறி மளமளவென ஆட்டமிழந்தனர். முதல் இன்னிங்ஸில் வெறும் 109 ஓட்டங்களுக்கு இந்திய அணி ஓல் அவுட்டானது. அவுஸ்திரேலியா அறிமுக ஸ்பின்னர் 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்கள் அடிக்க, 88 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில், 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி 163 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க, 76 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை அடித்து அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி பெற்ற 88 ஓட்டங்கள் முன்னிலை தான் இந்திய அணிக்கு பின்னடைவாக அமைந்தது. அதற்கு, ஜடேஜா வீசிய நோபாலும் ஒரு காரணம்.

மார்னஸ் லபுஷேன் களத்திற்கு வந்ததுமே ஜடேஜாவின் பந்தில் ஓட்டம் அடிக்காமல் டக் அவுட்டானார். ஆனால் அது நோ பாலாக அமைய, லபுஷேன் தப்பித்தார்.

அதன்பின்னர் உஸ்மான் கவாஜாவுடன் இணைந்து 2 ஆவது விக்கெட்டுக்கு 96 ஓட்டங்களை சேர்க்க காரணமாக அமைந்தார். அந்த ஒரு பந்து தான் ஆட்டத்தின் திருப்புமுனையாக அமைந்ததாக கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கவாஸ்கர் பேசியதாவது, ஜடேஜா வீசிய நோபால் காரணமாக அதன் பின்னர் லபுஷேனும் கவாஜாவும் இணைந்து 96 ஓட்டங்களை சேர்த்தனர்.

இந்திய அணி மொத்த மாகவே 109 ஓட்டங்களுக்கு ஓல் அவுட்டானது. எனவே ஜடேஜா வீசிய அந்த ஒரு நோபால் தான் ஆட்டத்தின் திருப்புமுனையாகவும் இந்திய அணியின் தோல்விக்கு காரணமாகவும் அமைந்தது என அவர் கூறினார். (4)

# தொடரை வென்றது இங்கிலாந்து

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், இங்கிலாந்து கிரிக்கெட் அணி 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என முன்னிலை பெற்ற இங்கிலாந்து அணி, தொடரையும் வென்றுள்ளது.

மிர்புரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 326 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 327 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங் களாதேஷ் அணி, 44.4 ஓவர் கள் நிறைவில் 194 ஓட்டங்க ளுக்கு அனைத்து விக்கெட்டு களையும் இழந்தது. இதனால், இங்கிலாந்து அணி 132 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4)

# மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்டில் தென்னாபிரிக்கா வெற்றி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

செனசூரியனில் கடந்த 28 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, முதல் இன்னிங்ஸிற்காக 342 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹெய்டன் மார்க்ரம் 115 ஓட்டங்களையும் எல்கர் 71 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், அல்சார்ரி ஜோசப் 5 விக்கெட்டுகளையும் ரோச், கெய்ல் மேயர்ஸ், கெப்ரியல் மற்றும் ஹோல்டர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, பதிலுக்கு முதல் இன்னிங்ஸிற்காக, களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 212 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ரெய்பர் 62 ஓட்டங்களையும் பிளெக்வுட் 37 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில், நோக்கியா 5 விக்கெட்டுகளையும் ரபாடா மற்றும் கோட்ஸே ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மார்க்கோ ஜென்ஸன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, 130 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 116 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதற்கமைய தென்னாபிரிக்கா அணி, மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 247 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஹெய்டன் மார்க்ரம் 47 ஓட்டங்களையும் கோட்ஸே 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ரோச் 5 விக்கெட்டுகளையும் அல்சார்ரி ஜோசப் மற்றும் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கெப்ரியல் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 247 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 159 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், தென்னாபிரிக்கா அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, பிளெக்வுட் 79 ஓட்டங்களையும் ஜேஸன் ஹோல்டர் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், ரபாடா 6 விக்கெட்டுகளையும் ஜென்ஸன் 2 விக்கெட்டுகளையும் நோக்கியா மற்றும் கோட்ஸே ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்கா அணி சார்பில், முதல் இன்னிங்ஸில் 115 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸில் 47 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ஹெய்டன் மார்க்ரம் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 8ஆம் திகதி ஜோகனஸ்பர்க் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை பிற்போட

# பெரமுனவின் பெரும் புள்ளிகள் ரணிலுடன் இணைந்து சதித்திட்டம்

## மனோ கணேசன் தகவல்

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பொதுஜன பெரமுனவின் பெரும் புள்ளிகளும் திட்டம் தீட்டுவதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பாராளுமன்றத்தில் எதிரணியில் சிலர் தன்னை சந்தித்து தேர்தலினை தள்ளி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்கள் என பெயர் குறிப்பிடாது தெரிவித்தமையானது நகைச்சுவை நடிகர் பேசுவதனை போலுள்ளது.

ஆனால் ஆளும்கட்சியீனை பொறுத்தமட்டில் பகிரங்கமாக சில அமைச்சர்கள் ஜனாதிபதியுடன் சேர்ந்து தேர்தலினை ஒத்திவைக்க வேண்டும் என்பதை கூறி வருகின்றனர்.

பிரதான கட்சியொன்றின் தலைவரான மகிந்த ராஜபக்ஷ



மற்றும் கட்சியின் பொது செயலாளரான சாகரகாரியவசம் ஆகியோர் மக்களை முட்டாளாக்க குழந்தைகள் போல நடிக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் வெளியில் தேர்தல் நடத்த வேண்டும் என கூறுகின்றனர். அதனை ஏன் ஊடகங்களிடம் சொல்லுகின்றார்கள், ஜனாதிபதியிடம் கூறுங்கள்.

அன்றைய தினம் ஜனாதிபதியின் பாராளுமன்ற வருகைக்கு பின் ஆளும்கட்சியின் குழுக்கூட்டம் இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்திற்கு வெளியில் வந்து பேசிய மகிந்த ராஜபக்ஷ உட்பட சாகரகாரியவசம் ஆகியோர் பெட்டி பாம்பாக, பூனையாக அடங்கி வாயினை மூடி இருந்துள்ளனர்.

ஆகவே இவர்கள் தம்மை மக்களிற்கு முன் ஜனநாயக* போராளிகளாக காட்டிக் கொண்டு திரைக்கு பின் ஜனநாயகத்தினை எட்டி உதைக்கின்றனர். இந்த தந்திரத்தினை பொதுஜன பெரமுன வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு ஜனாதிபதிக்கு பின்னால், பொதுஜன பெரமுனவின் தலைவர் தொடக்கம் பொதுச்செயலர் வரை அனைவரும் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். (4)

# போதைப்பொருளுடன் வெளிநாட்டு பிரஜைகள் நால்வர் கைது

(கொழும்பு)

ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் ஹஸ்ரக போதைப்பொருளுடன் வெளிநாட்டு பிரஜைகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நண்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஹபராதுவ, ஹிட்டியனகல தலபே மற்றும் பிடிதுவ பிரதேசங்களில் ஹபராதுவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் நால்வரும் ஹஸ்ரக போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 16 கிலோ 338 கிராம் ஹஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் காலி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளனர். ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4)

# வான்-மோ.சைக்கிள் விபத்து இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

எஹெலியகொட பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் 22 வயதுடைய யுவதி உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எஹெலியகொட பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு-இரத்தினபுரி பிரதான வீதியின் மின்னான பிரதேசத்தில் வான் எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் மற்றும் பின்னால் அமர்ந்து பயணித்த பெண் ஒருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 22 வயதுடைய பெண் ஒருவரும் 35 வயதுடைய ஆண் ஒருவரும் உள்ளடங்குவதுடன் அவர்கள் குருவிட்ட பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் சாரதியின் கவனயீனம் விபத்துக்கு காரணம் என்றும் விபத்து தொடர்பில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# 130 ஆயுர்வேத மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் 130 ஆயுர்வேத மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஆயுர்வேத மருத்துவர் பீ.ஹேவகே தெரிவித்துள்ளார்.

ஆயுர்வேத மருந்துகளை தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்களில் நிலவும் தட்டுப்பாடே இதற்கு காரணமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சில ஆயுர்வேத மருந்துகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

இருப்பினும், அவற்றை இறக்குமதி செய்வதில் வழங்குநர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளினால் மூலப் பொருட்களின் இறக்குமதி தடைப்பட்டுள்ளதாக அரச ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஆயுர்வேத மருத்துவர் பீ.ஹேவகே தெரிவித்துள்ளார். (4)

# இராசிபலன்

05.03.2023
மாசி 21, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 3.34 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு - 10.45 மணிவரை
சுபநேரம் -9.26-10.56 மணிவரை
இராகுகாலம்- 4.56-6.26 மணிவரை

சந்திராஷ்டமம் - பூராடம்,உத்தராடம்

வளவன்

**மேஷம்**: எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்**: நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, விருப்பங்கள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**: செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, சொன்ன சொல்லை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**மகரம்**: பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர்,பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**: விடா முயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும்,புதிய பொருட்சேர்க்கையுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்**: சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்,சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்**: வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்தினர் வருகையுண்டு.

**கும்பம்**: ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் நாள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்,போசன சுகமுண்டு.

**மிதுனம்**: கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**கன்னி**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணை புரியும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு**: கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மீனம்**: வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பாராட்டும் புகழும் கூடும் வாய்ப்புண்டு.

நற்குணம் ஒன்றே மிகுந்த அழகையும் மரியாதையையும் உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துணுக்காய் வலய பாடசாலைகளுக்கான
## போக்குவரத்து வசதி இன்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் பாதிப்பு




(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட கூடுதலான பாடசாலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மையால் ஆசிரியர்கள், மாணவர்கள் அன்றாடம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் தற்போது எண்ணாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் மேற்படி கல்வி வலயத்தின் கீழ் உள்ள கூடுதலான பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளதுடன் போதிய போக்குவரத்து வசதிகள் இன்றியே காணப்படுகின்றன.

எனவே குறித்த பகுதிக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-315)

# வரலாற்று பிரசித்தி பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்தோடு ஆரம்பமானது.

தொடர்ந்து இரவு விசேட ஆராதனை இடம்பெற்று சுற்றுப் பிரகாரமும் இடம்பெற்றது. திருவிழாவின் இரண்டாவது நாளான நேற்றுக் காலை 6 மணிக்கு திருச்செபமாலை இடம்பெற்று, 6.30 இற்கு ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் வரவேற்கப்பட்டு 7 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலி கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்தந்தை அன்ரன் தில்லை நாயகம் மற்றும் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வருடம் கச்ச தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் 2800 இலங்கை பக்தர்களும் 2100 இந்திய பக்தர்களும் கலந்து கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த வருட திருவிழாவில் மட்டுப்படுத்தப்பட்டவர்களே அனுமதிக்கப்பட்டிருந்ததால் இவ்வருடத்திற்கான திருவிழாவில் அதிகளவான பக்தர்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை நிலையத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான சிறுவர்களுக்கான இன்சுலின் ஊசி மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன. கனடா நாட்டைச் சேர்ந்த நேயம் பவுண்டேஷனின் நிதி உதவியில் மருந்துப் பொருட்கள் நேற்று சனிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (படம்-சிவசாந்தன்)

## ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

கணபதி படிப்பகத்தின் 55 ஆவது ஆண்டு விழாவும் பாலர் தின விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நெடியகாடு திருச்சிற்றம் பலப் பிள்ளையார் ஆலய வீதியில் கணபதி படிப்பகத்தின் தலைவர் சி. மதுசூதனன் தலைமையில் இடம்பெறும். (4)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார பண்பாட்டு ஆதிக்கமும் பெண் ஒடுக்கு முறையும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை பி.ப 4 மணியளவில் கே.கே. எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் விசேடகருத்துரையினை ஊடகவியலாளர் துளசி முத்துலிங்கம் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (4)




மாணவர்கள் மத்தியில் கடற்புல்லின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் 10,11 இல் நீரியிரின வளத் தொழில்நுட்பவியல் பாடம் கற்கும் மாணவர்களிடையே கடற்புல் தொடர்பான அறிவுக் களஞ்சியப் போட்டி நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் சர்வதேச கடற்புல் தினமாகிய கடந்த 1 ஆம் திகதி வழங்கப்பட்டன. (படம்- கஜிந்தன்)

# உலக பாடசாலைகள் சதுரங்க போட்டி யாழிலிருந்து 6 மாணவர்கள் தகுதி





(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 6 வீர, வீராங்கனைகள் கிரீஸ் நாட்டில் நடைபெறவுள்ள உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவ்வாண்டுக்கான உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டி கிரீஸ் நாட்டில் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் இலங்கை சார்பாக விளையாட தகுதியுடைய வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய் வதற்கான தேசிய மட்டப் போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன.

இப் போட்டியில் வெற்றிகளைப் பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேர் உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

குறிப்பாக கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் வேணுகானன் நயனசேனன் 7 வயது ஆண்கள் பிரிவிலும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சிவஞானவேல் நர்த்தவி 15 வயது பெண்கள் பிரிவிலும் தேசிய மட்டத்தில் முதல் இடத்தை பெற்று கிரீஸ் நாட்டில் நடக்கவுள்ள சதுரங்கப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் இப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து 13 வயது பெண்கள் பிரிவில் உ.வைஷாலி மூன்றாம் இடத்தினைப் பெற்றும் அ.ஆருத்ரன் 17 வயது ஆண்கள் பிரிவில் நான்காம் இடத்தினைப் பெற்றும் பி.ஜனுக்சன் 13 வயது ஆண்கள் பிரிவில் ஆறாம் இடத்தினைப் பெற்றும், பி.பிரதிக்சா 9 வயது பெண்கள் பிரிவில் ஆறாம் இடத்தினைப் பெற்றும் இலங்கை அணி சார்பாக கிரீஸ் நாட்டில் நடக்கவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான உலக பாடசாலைகள் சதுரங்கப் போட்டியில் பங்கு பெறத் தகுதி பெற்றுள்ளனர். (4-33-104)




சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒருதொகுதி சுத்திகரிப்பு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்-சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 386
Viber 076 636 3378





> குருந்தூர் மலையில் நீதிமன்ற தடை உத்தரவை மீறி பௌத்த விகாரை கட்டுமானம் நடத்தேறியிருக்கிறது. இதுவே தமிழர் தரப்பு அங்கு கட்டுமானப் பணியை மேற்கொண்டிருந்தால் அதன் விளைவு தென் பகுதியில் எவ்வாறு அமைந்திருக்கும்"

# நீதிமன்ற தடை உத்தரவை மீறி பௌத்த விகாரை கட்டுமானம்

## பௌத்தத்தை திணிக்கும் ஆக்கிரமிப்பின் அடையாளம்

• அபிமன்யு

இந்த நாடு ஒரு சாராருக்கு மாத்திரமே சொந்தம் என்ற அடக்குமுறைச் சிந்தனையே நாட்டில் யுத்தம் ஏற்படக் காரணமாகி இரத்த ஆறு ஓடியது எனும் உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆயினும் இந்த யதார்த்தத்தை பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை தமிழினத்திடம் அற்றுப் போய்விட்டது.

ஏனெனில் அவ்வளவுக்கு தமிழினத்தின் உரிமை விடயத்தில் இம்மியும் இசைந்து போகாது தொடர்ந்து இனவாதத்தைத் தூண்டும் செயல்களையே மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழினத்தின் பூர்வீக நிலங்களை கபளீகரம் செய்யும் நாசகார செயற்பாடுகள் அன்று தொட்டு இன்று வரை நடந்து கொண்டு தான் இருக்கிறது.இதற்கு ஒரு முடிவே இல்லையா எனும் அளவிலேயே இன்று வரை தமிழினம் புளுங்கிக் கொண்டிருக்கிறது.

தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என அரச திணைக்களங்களே பக்கச்சார்புடன் நடந்து கொள்வதை கண்ணூடே பார்க்கக் கூடியதாக உள்ளது.

தமிழினத்தின் பூர்வீக நிலங்களில் அவர்கள் வாழ்வதற்கும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தடை விதிக்கும் செயற்பாடுகள் தாராளமாக நடந்து கொண்டிருந்தாலும் இவை அனைத்தும் தமிழினத்துக்கு மாத்திரமே என்பது தான் மிகக் கொடுமையானது.

தமிழினம் தனது பூர்வீக நிலங்களைப் பெற அறவழியில் போராட்டம் நடத்தத் தலைப்பட்டாலும் அதை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.

தொல்பொருள் திணைக்களமாயினும் வனஜீவராசிகள் திணைக்களமாயினும் பக்கசார்புடன் நடந்து கொள்வது ஏன் என்பதை தமிழினம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. ஆயினும் அவர்களை தமிழினத்தினால் எதிர்த்து நிற்க முடியவில்லை என்பது தான் உண்மை.

இந்த நாட்டில் பௌத்தத்துக்கே முன்னுரிமை எனும் அரச இயந்திரத்தின் கொடுமைத்தனத்தை எங்கு போய் கூறிவிட முடியும்.எரியும் வீட்டிற்கு எண்ணெய் ஊற்றுவது போல பௌத்த தேரர்கள் தொடர்ந்து தமிழினத்திற்கு எதிராகவும் அவர்களின் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதிலும் மிகத் தீவிரம் காட்டிவருகின்றனர் என்பது வேதனைக்குரியது. இதற்கு மிக நல்ல உதாரணமாக முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரத்தை எடுத்துக்கொள்ளலாம்.

குருந்தூர் மலை தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடம். அங்கு காலம் காலமாக ஆதி சிவன் ஆலயம் இருந்ததும் அதற்கான ஆதாரங்கள் இருந்தும் குருந்தூர் மலை பௌத்தத்திற்கு சொந்தமானது என தொல்பொருள் திணைக்களம் செயற்பட்டதை எவராலும் ஏற்றுவிட முடியாது.

இந்த நாட்டில் வாழும் அனைத்து இனங்களுக்கும் பொதுவான அரச திணைக்களம் எவ்வாறு ஒரு மதத்துக்கும் இனத்துக்கும் சார்பாக செயற்படும் என்பது தமிழினத்திடம் எழுந்துள்ள கேள்வி.

இது சிங்கள பௌத்த பூமி. இங்கு பௌத்தத்திற்கும் சிங்களத்துக்குமே முன்னுரிமை என்பதை அரச இயந்திரத்தினும் அரசியல் வாதிகளினதும் சிந்தனையாக இருந்து வருகின்றது என்பதை தமிழினம் தற்போது உணர்ந்துள்ளது.

குருந்தூர்மலை ஆதி சிவன் ஆலயத்தை அண்டிய மலை அடிவாரத்தை தொல்பொருள் திணைக்களம் ஆய்வு செய்து அங்கு பௌத்த சின்னம் இருப்பதாகத் தெரிவித்து தமிழர் பூர்வீக நிலத்தில் பௌத்தம் வாழ்ந்ததான வரலாற்றை மாற்றி எழுத முற்பட்டது கொஞ்சம் கூட ஏற்கக் கூடியதான விடயம் அல்ல.

குருந்தூர் மலையில் அரச ஆதரவுடன் பௌத்த விகாரை கட்டும் பணிகள் ஆரம்பமானது தமிழர் மத்தியில் பாரிய எதிர்வினைகளை ஏற்படுத்தியிருந்ததும் குறித்த விடயம் நீதிமன்றம் வரை சென்றதும் குருந்தூர் மலைப் பகுதியில் எவ்வித கட்டுமானங்களும் மேற்கொள்ளக் கூடாது என முல்லைத்தீவு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருந்ததும் அனைவரும் அறிந்த விடயமே.நிலை இதுவாக இருக்கையில் தற்போது நீதிமன்ற தடை உத்தரவை மீறி குருந்தூர் மலையில் பௌத்த விகாரை கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் பொரும்பான்மையினர்.

குறித்த பௌத்த விகாரையின் கட்டுமானம் தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடனே நடைபெற்றிருக்கிறது என்பது தான் முக்கியமான விடயம்.

இதுவே, குறித்த பகுதியில் தமிழர் தரப்பு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருந்தால் அதன் விளைவு எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை.

அவ்வாறு நடந்திருந்தால் இன்றைக்கு தென்பகுதி கொதித்தெழுந்திருக்கும்.என்ன செய்வது இது பெரும்பான்மை சிங்கள பௌத்த நாடு என்ற கோட்பாட்டுக்குள் வாழும் எம்மால் எதைச் செய்து விட முடியும்.

குறித்த கட்டுமானத்தை மேற்கொண்ட விடயம் தொடர்பில் நீதிமன்றம் தொல்பொருள் திணைக்களத்தையும் பொலிஸாரையும் விளக்கம் கேட்டுள்ளமை மனதுக்கு ஆறுதல் அளிக்கும் விடயமாக உள்ளது.

இது சிங்கள பௌத்த நாடு. இங்கு நாம் வைத்தது தான் சட்டம் என்ற அதிகாரத் தோரணையில் நடந்து கொள்ளும் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் ஒரு விடயத்தை மீண்டும் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆம், தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டதும் அவர்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் மறுக்கப்பட்டதுமே இந்த நாட்டில் போர் வெடிக்கக் காரணமானது. இந்த உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டியவர்கள் உணந்து கொண்டால் சரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

நீதிமன்ற உத்தரவையும் மீறி குருந்தூர் மலையில பௌத்த விகாரை அமைப்பதற்கு ஆலடியில கடும் கண்டனம் தெரிவிக்க வேணும்.

பௌத்த பிக்குகள் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்ற நிலமைக்கு ஒரு போதும் விடக்கூடாது.

பண்டிதர் பரமலிங்கம் கோபாவேசத்துடன் கூறினார். பண்டிதரின் உரத்த குரல் ஆலடியை அமை தியாக்கியது.

அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி குருந்தூர் மலையில பௌத்த விகாரை அமைப்பது தொடர்பில பௌத்த-இந்து அமைப்பு என்ன செய்யுது.

பௌத்த-இந்து மத ஒற்றுமையை ஏற்படுத்துறதாக இருந்தால், சிவனாலயம் அமைந்துள்ள குருந்தூர் மலையில பௌத்த விகாரை அமைக்கலாமோ.

**சாத்திரியார்:-** பௌத்தத்திற்கு எதிர்ப்பு வராமல் இருப்பதற்குத்தான் பௌத்த-இந்துமத அமைப்பே தவிர, இந்து மதத்தைக் காப்பாற்றுவதற்கல்ல.

**வாத்தியார்:-** அது தான் நான் அடிக்கடி சொல்லுறது இந்து மதத்திற்கு கௌரவம் கிடைக்க வேணும்.


இந்த நாட்டில இந்து மதத்தைப் பாதுகாக்க வேணும் எண்டால், முதலில இந்து மதத் தலைவர்கள் ஒரு தலைமைப் பீடத்தின் கீழ் அணிதிரள வேணும்.

அதேநேரம் இந்து சமயத்திற்கு முன்னுரிமை வழங்க மறுத்தால், பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களின் சந்திப்புக்களை முற்றாகத் தவிர்க்க வேணும்.

என்றைக்கு இதை இந்து மதத் தலைவர்கள் செய்யினமோ அண்டைக்குத்தான் இந்து சமயத்தைப் பற்றி அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் கவனம் செலுத்துவினம்.

**பண்டிதர்:-** வாத்தியார் நீங்கள் சொல்லுறது உண்மைதான். ஆனால் அது நடை முறைக்கு வருமோ?

பண்டிதர் இவ்வாறு கேட்டதும் வாத்தியார் சிறிது நேரம் அமைதி காத்தார். இதன்போது இடையில் குறுக்கிட்ட சிறாப்பர் கனகசபை, இந்து சமயத்துக்கென ஒரு தலைமையை அனைவரும் அங்கீகரிக்க வேணும்.



## குருந்தூர் மலையில் விகாரை ஆலடியில் கடும் கண்டனம்!

அந்தத் தலைமைப் பீடத்தின் கீழ் எல்லா இந்து அமைப்புக்களும் கூடி ஏகமனதாக முடிவுகளை எடுக்கிறதுதான் ஒரே வழி.

**விதானையார்:-** உண்மைதான். நல்லூர்க் கந்த சுவாமி கோவிலின் பெருமை பற்றி இப்போது உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

அதிலும் குறிப்பாக மிகப்பெரும் வரலாற்றுப் பெருமைமிக்க தலங்கள் அமையப்பெற்ற தமிழ் நாட்டில கூட, யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயத்தின் நிர்வாகத்தைச் சுட்டிக்காட்டி அது போல தமிழக ஆலயங்கள் இருக்க வேணும் எண்டு கூறுமளவிற்கு நல்லூர் முருகன் ஆலயம் உயர் சிறப்பு பெற்றிருக்குது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அண்ணாமலை அவர்கள் யாழ்ப்பாணக் கம்பன் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது, நல்லூர் முருகன் ஆலயத்தின் சம தர்மத்தையும் ஒரு ரூபாவில் அர்ச்சனை செய்கின்ற மகத்துவத்தையும் கூறி, நல்லூர் முருகன் ஆலயம் போல தமிழகத்து ஆலயங்கள் இருக்க வேண்டும் என்பதைத்தான் அங்கு வலியுறுத்திக் கூறியதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு உலகிற்கே முன்னுதாரணமாக விளங்கும் நல்லூர் முருகன் ஆலயம் எங்கட மண்ணில இருக்கும் போது, இந்து மதத்திற்கென ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்தி அதனைச் சீராக இயக்குவதென்பது முடியாத காரியமல்ல.

இவ்வாறு விதானையார் விஸ்வலிங்கம் கூற, அதனை ஆலடியில் இருந்த அனைவரும் தலையசைத்து ஏற்றுக் கொண்டனர்.

**சிறாப்பர்:-** அது சரி இப்ப வட பகுதியில உள்ள தென்னைகளில ஒரு வகையான ஈ தாக்கம் ஏற்பட்டிருக்குது எண்டும் அதனால தென்னை மரங்கள் பட்டுப் போகுது எண்டும் சொல்லுகினம். இது பற்றி ஏதும் கேள்விப்பட்டனீங்களோ?

**கங்காணி:-** இந்தத் தென்னம் ஈ அமெரிக்காவில பரவி இந்தியாவுக்கு வந்து, 2022 ஆம் ஆண்டளவில இலங்கையில தென்பகுதிக்கு வந்திருக்குது.

இப்ப யாழ்ப்பாணத்தில இந்த நோய் பரவி தென்னம் பிள்ளைகளை நாசமறுக்குது.

அதிலும் நல்லூர், கந்தர் மடம், றக்காறோட், கச்சேரியடிப் பக்கங்களில இந்த நோயின் தாக்கத்தால தென்னை மரங்கள் படத் தொடங்கியுள்ளன.

**மூப்பர்:-** தென்பகுதியில பரவின தென்னம் ஈ ஏன் கங்காணியார் நல்லூர்ப் பக்கம் வர வேணும்.

**கங்காணி:-** தென்பகுதியில இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகிற சிங்களச் சுற்றுலாப் பயணிகள் தாங்கள் வாற பஸ்களில தென்னம் பாளைகட்டி தென்னம் ஓலையில சோடனை செய்து தானே வாறவியள்..

அப்படி வாறவர்கள் நல்லூரில தங்கி ஆலய தரிசனம் செய்யிறவியள். இதால தான் நல்லூர்ப் பகுதியில தென்னம் ஈ பரவக் காரணம் எண்டு எங்கட வட மாகாணத் தென்னைப் பயிர்ச் செய்கை சபை சொல்லுது.

**வாத்தியார்:-** எதுவாயிருந்தாலும் தென்னம் ஈ விடயத்தில நாங்கள் விழிப்பா இருந்து அதனை முற்றாக அழிக்க வேணும்.

இல்லையெண்டால், முள்முருக்கு மரத்திற்கு ஏற்பட்ட அதே கதிதான் எங்கட தென்னை மரங்களுக்கும் ஏற்படும்.

**விதானையார்:-** நீங்கள் ஏதோ கதைக்கிறியள் எனக்கு எப்பவும் எங்கட இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய எண்ணம் தான்.

இதை நான் சொல்லுறதுக்காக என்னை ஓர் அரசியல்வாதி எண்டு நினைத்துப் போடாதிங்க.

இப்ப இருக்கிற சூழ்நிலையில எங்களுக்கு ஒரு திடமான தீர்வை நாங்கள் வலியுறுத்த வேணும்.

ஒரு கொஞ்சக் காலமா தீர்வுத் திட்டம் பற்றிக் கடுமையாகக் கதைத்தம்.

இப்ப அப்படியே பொத்தெண்டு விட்டிட்டம். அது தான் எங்களிட்ட இருக்கிற பலயீனம்.

ஒரு பிரச்சினையைத் தொடர்ச்சியாகக் கதைத்து அதற்கொரு முடிவுகட்டுகிற பழக்கம் எங்களிட்ட அறவே இல்லை.

**சிறாப்பர்:-** விதானையார் சொல்லுறது சரிதான். ஆனால், அரசாங்கமும் இனப்பிரச் சினைக்கான தீர்வைப் பற்றிக் கதைக்கிற போதெல்லாம் இன்னொரு பிரச்சினையைக் கொண்டு வந்து அதனை மேலாடச் செய்து விடுகுது.

இந்தாப் பாருங்க, உள்ளூராட்சி சபைத் தேர்தலில எங்கட அரசியல்வாதிகள் மூழ்கிக் கிடக்கினம்.

தேர்தல் பிரசாரத்தில ஈடுபடுகிறதா? அல்லது 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் பற்றிக் கதைக்கிறதா? என்கிற போது, தேர்தல் தானே எங்கட ஆட்களுக்கு முக்கியமாகத் தெரியுது.

நிலைமை இப்படியாக இருக்கையில, என்னெண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தமிழர்கள் மீது பற்றுக் கொண்ட நடிகர் விஜயகாந்தின் தற்போதைய நிலை கவலைக்கிடமாக இருக்கிறதே?

**அகிலன் — கனகராயன் குளம்**

**அன்பின் வியாசரே சம்சாரம் ஒரு மின்சாரம் என்பது உண்மையா?**

சம்சாரத்தை மின்சாரத்தோடு ஒப்பிடுவது எதற்காக என்றால்,
மின்சாரத்தை சரியான முறையில் கையாள வேண்டும். அவ்வாறு கையாளாவிடின் அது உயிரையே எடுத்துவிடும்.
அதுபோலத்தான் சம்சாரமும் முறைதவறி நடந்தால் அதன் தாக்கம் மின்சாரத்திலும் மோசமாக இருக்கும். எனது மனைவியுடன் சிறு பிரச்சினை நான் வீட்டின் கதவைப் பூட்டி விட்டு இருந்து விட்டேன்.
என் மனைவி வந்து கெஞ்சியதால் கதவைத் திறந்து வெளியே வந்தேன். மனைவியின் கெஞ்சல்.
பிள்ளை மேல சத்தியமா அடிக்க மாட்டேன் வெளிய வாங்கோ.

**மதுவன் — மீசாலை**

**நெடுமாறன் ஐயாவின் கருத்து தொடர்பில் கூற முடியுமா வியாசரே?**

நெடுமாறன் ஐயாவின் கருத்தைக் கேட்டு உலகமே அதிர்ந்து போய்விட்டது.
அவரின் இக்கூற்றின் பின் வீதிகளில் இராணுவ பிரசன்னத்தை அதிகமாகக் காண கூடியதாகவும் இருக்கிறது.
இது எது உண்மை எது பொய் எனத் தெரியவில்லை. ஆனாலும் தலைவன் என்பவன் தன் இனம் அழிந்து போக தனது உயிரைப் பாதுகாத்து ஓடி ஒழித்ததாய் எந்த வரலாறுகளிலும் இல்லை.
இங்கு இவ்வாறு நடந்திருந்தால் அந்த வரலாறு பிழைத்துவிடும் அல்லவா? ஆதலால் அதற்கு வாய்ப்பில்லை என்பதுதான் உண்மை.

**திகான் — வடமராட்சி**

**போர்க்காலங்களில் கூட அடிப்படைத் தேவைகளை சிறப்பாக கையாண்ட தமிழர் இன்று திணறுகின்றனரே?**

தமிழினத்திடம் அன்று மிகச்சிறந்த பொர்மியம் இருந்தது.
அந்த ஒன்றே எம்மையும் எம் சமூகத்தையும் உயர்த்தி வைத்திருந்தது என்றால் அது மிகையாகாது.
மின்சாரம் இல்லை, விளக்கு எரிக்க மண்ணெண்ணெய் இல்லை. குப்பி விளக்கில் படித்தோம். கல்வியில் முன்னிலை பெற்றோம்.
அனைத்துப் பொருட்களுக்கும் தட்டப்பாடு. ஆனாலும் மூன்று வேளை உணவுக்கு ஒரு நாளும் குறை இருந்ததில்லை.
எந்த நேரத்தில் எங்கு செல்விழும், எந்த நேரத்தில் கிபீர் வந்து குண்டு போடும் என்று தெரிந்திடாத ஏக்கம் நிறைந்த வாழ்க்கை யாயினும் அந்த வாழ்வில் நிறைவும் நிம்மதியும் இருந்தது.
அனைத்தும் இப்போது இருக்கிறது. ஆனால் நிறைவும் இல்லை. நிம்மதியும் இல்லை.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சிவம் — வதிரி**

**மற்றவர்களுக்கு அறிவுரை சொல்லச் சொல்லி தங்களிடம் கூறினால் என்ன சொல்வீர்கள் வியாசரே?**

அறிவுரை கூறுவது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆனால் அறிவுரை கூறும் நாம் அந்த அறிவுரைக்கேற்ப வாழ்கின்றோமா என்பதை பார்க்க வேண்டும்.
எங்களில் பலரின் பலவீனமே அதுதான்.
ஆம், அறிவுரையை அள்ளி வழங்குவார்கள். ஆனால் அந்த அறிவுரைக்கு எதிர்மறையாக நடந்து கொள்வார்கள்.
இதைத்தான் ஊருக்கு உபதேசம் செய்கிற பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்து இறந்த தாம் என்ற பழமொழியின் அர்த்தம் போல.

**தாரா — வதிரி**

**ஈழத்தமிழர்கள் மீது பற்றுக் கொண்ட நடிகர் விஜயகாந்தின் தற்போதைய நிலை கவலைக்கிடமாக இருக்கிறதே?**

ஈழத்தமிழர்கள் மீதும் ஈழப் போராட்டம் மீதும் பற்று வைத்தவர்களில் நடிகர் விஜயகாந்தும் ஒருவர். ஈழத்தமிழர் மீது கொண்ட பற்றினால் தனது மூத்த மகனுக்கு பிரபாகரன் எனப் பெயர் சூட்டி அழகு பார்த்தவர்.
ஈழத்தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் பாராமுகத்தையும் இலங்கையின் கோர முகத்தையும் கிழித்துக்காட்டியவர்.
இன்[illegible] விஜய [illegible] என்பது எத்தனைப்பேருக்குத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதி வழங்கும் இலங்கையின் திட்டம் பற்றி?

**சுதன் — குப்பிழான்**

**சர்வதேச விசாரணை என்பது கொலை செய்தவர்களைக் கொண்டே தீர்ப்பு எழுதுவதா வியாசரே?**

என்ன செய்வது. தமிழினம் பாவப்பட்ட இனம். அந்த இனத்துக்கு இப்படி ஒரு தலைவிதி அமைந்து விட்டது.
அடித்தவரே அடிவாங்கியவரை விசாரணை செய்தால் அந்த விசாரணையில் எவ்வாறு உண்மைத்தன்மை இருக்கும்.
அது சரி எம் தமிழ்த் தலைவர்களில் சிலர் சர்வதேச விசாரணை எப்போதோ முடிந்து விட்டது. இனி தண்டனை வழங்குவது தான் பாக்கி என்று கூறுகின்றனரே.
இதற்கு தமிழினம் என்னத்தை கூறப் போகிறது.

**பத்மன் — வதிரி**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிதி இலங்கைக்கு கிடைக்குமா வியாசரே?**

நாடு மிக மோசமான நெருக்கடியைச் சந்தித்திருக்கிறது.
நாட்டை நான் மீட்டெடுப்பேன் எனக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களை எப்படி அடக்கலாம் எனச் சிந்திக்கிறாரே தவிர நாட்டை மீட்கும் எண்ணம் இருப்பதாகத் தெரியவே இல்லை.
சர்வதேச நாணய நிதியத்தின் நிதி இலங்கைக் கடனை அடைக்க ஒரு மூலைக்கும் பத்தாது.
அந்தளவுக்கு கடன் பட்டிருக்கிறார்கள். நல்ல விலைக்கு இலங்கையை விற்றால் கடன் அடைக்க வாய்ப்புண்டு.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தமிழக மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதி வழங்கும் இலங்கையின் திட்டம் பற்றி?**

அரசாங்கம் அவ்வாறு அனுமதி வழங்குவதால் அவர்களுக்கு எந்தவித பிரச்சினையும் இருக்காது.
ஆனால் கடலுக்குள் முரண்டு பிடித்து அடிபடப் போவது தமிழக-தமிழ் மீனவர்களே.
இதனால் அரசுக்கு எந்தவித பிரச்சினையும் இல்லை. அவர்களும் விரும்பியது இதைத்தான்.
இந்த சூழ்ச்சிக்குள் தமிழராகிய நாம் சிக்குவோமாக இருந்தால் அது எம் தொப்புள் கொடி உறவுகளுடனான பிணைப்பை துண்டிக்கும்.
ஆட்சியாளர்கள் விரும்புவதும் அதுவே. ஆதலால் இவ்விடத்தில் பொறுமை காப்பதே சிறந்தது.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: தாய் சொல்லை தட்டாதே
பாடியவர்: சௌந்தரராஜன்
இசை: மே.வி. மஹாதேவன்



போயும் போயும்
மனிதனுக்கிந்த புத்தியை கொடுத்தானே
இறைவன் புத்தியை கொடுத்தானே
அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து
பூமியை கெடுத்தானே
மனிதன் பூமியை கெடுத்தானே

போயும் போயும்
மனிதனுக்கிந்த புத்தியை கொடுத்தானே
கண்கள் இரண்டில் அருள் இருக்கும்
சொல்லும் கருத்தினில் ஆயிரம் பொருள் இருக்கும்
கண்கள் இரண்டில் அருள் இருக்கும்
சொல்லும் கருத்தினில் ஆயிரம் பொருள் இருக்கும்

உள்ளதில் பொய்யே நிறைந்திருக்கும்
அது உடன்பிறந்தோரையும் கருவறுக்கும்
பாயும் புலியின் கொடுமையை
இறைவன் பார்வையில் வைத்தானே
புலியின் பார்வையில் வைத்தானே
இந்த பாழும் மனிதன் குணங்களை மட்டும்
போர்வையில் மறைத்தானே
இதைய போர்வையில் மறைத்தானே

போயும் போயும் .
மனிதனுக்கிந்த புத்தியை கொடுத்தானே
கைகளை தோழில் போடுகிறான்
அதை கருணை என்றவன் கூறுகிறான்
கைகளை தோழில் போடுகிறான்
அதை கருணை என்றவன் கூறுகிறான்
பைகளில் எதையோ தேடுகிறான்
கையில் பட்டதை எடுத்து ஒடுகிறான்
போயும் போயும்
மனிதனுக்கிந்த புத்தியை கொடுத்தானே
இறைவன் புத்தியை கொடுத்தானே
அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து
பூமியை கெடுத்தானே
மனிதன் பூமியை கெடுத்தானே
போயும் போயும்
மனிதனுக்கிந்த புத்தியை கொடுத்தானே

# ஈழத்தவரின் தரமான படைப்பு

## 'சாம் சூசைட் பண்ணப் போறான்' குறும்படம்

சிலோன் பிக்ச்சர்ஸ் சார்பில் ஐங்கரன் கதிர்காமநாதன் தயாரித்து கடந்த வாரம் You Tube இல் வெளியான "சாம் சூசைட் பண்ண போறான்" அனைவரின் ஏகோபித்த வரவேற்பை பெற்று வருகிறது. மிக எளிமையான ஒரு கதைக்கருவுடன் அட்டகாசமான தொழில்நுட்பத்துடனான மேக்கிங், படத்தை அடுத்த தளத்துக்கு எடுத்து சென்றிருக்கிறது. யாழில் இருந்து சர்வதேச தரத்துடன் வெளி வந்திருக்கும் ஒரு குறும்படம் என்று தாராளமாக சொல்லி கொள்ளக் கூடியவாறு எல்லா விதத்திலும் ஏலவே இங்கு படைக்கப்பட்ட, படைப்புக்களில் இருந்து தனித்து தெரிகிறது.

மிக எளிமையான, சாதாரணமான ஒரு கதைக்கரு. அது சொல்லப்பட்ட விதத்தில் தான் சிறப்பு சப்தங்கள், விசுவல் எபெக்ட், கலர் கிரேடிங், நடிப்பு, பாத்திர தெரிவு, பாடல் வரிகள், கலை இயக்கம், மேக் அப், என்று இறங்கிய இடம் எல்லாம் இந்த டீம் சிக்ஸர் அடித்து இருக்கிறார்கள்.

காட்சிக்கு காட்சி கண்களை அகல திறக்க வைக்கும்படி பாஷை யூரை பிரமாதமாய் காட்டி இருக்கும் ரிஷியின் கேமரா தோட்டத்து வாழை இலையில் பரிமாறப்பட்ட பக்கா பைவ் ஸ்டார் ஹோட்டல் விருந்து. கேமரா பற்றி பேசும் போது, கண்டிப்பாக குறிப்பிட்டே ஆக வேண்டிய எக்ஸ்ட்ரா ஆர்டினரியான நான்கு ட்ரோன் ஷாட்ஸ்

1. கடற்கரையில் இருந்து பாஷையூரை காட்டும் ஆரம்ப காட்சி

2. கால்பந்து விளையாடும் போதான ஷாட்ஸ்.




3. நண்பர்கள் சாமை காப்பாற்றி வள்ளத்தில் தூக்கி போடும் போது வைக்கப்பட்ட அந்த ஏரியல் வியூ ஷாட்

4. யாழ்ப்பாண கோட்டையை காட்டும் அந்த ட்ரான் ஷாட்.

பிராணவனின் இசையும் சிறப்பு சப்தமும், துஷியின் படத்தொகுப்பும் இந்த குறும்படத்தின் ஆணிவேர்கள். படத்தொகுப்பும் பின்னணி இசையும் பதற்றத்தை போட்டி போட்டுகொண்டு பார்வையாளர்களுக்கு கடத்துகிறது. ஒளிப்பதிவாளர், இசையமைப்பாளர், படத்தொகுப்பாளர், இயக்குநர் இவர்கள் எல்லோரும் ஒரே மீடிறனில் இருந்தாலன்றி இது சாத்தியமாவது கொஞ்சம் கடினம் தான். படத்தின் திரைக்கதை நொான் லீனியர் வகையறாவாக பயணித்தாலும் சிறப்பான எடிட்டிங் காரணமாக திரையில் எந்தவித குழப்பத்தையும் உண்டுபண்ணவில்லை. மாறாக இருப்பது நிமிடங்கள் எம்மை கட்டிப்போட்டு வைத்து இருந்தது. பாடல்கள், பாடல் வரிகள், குரல் ஒரு மேஜிக்கல் காம்போ. ஒரு குறும்படத்துக்கு இத்தனை மினக்கடலா என பிரமிப்பூட்டுகிறது.

படத்துக்கான நிறதொனி (Tone ) மஞ்சளும் நீலமும் என்பது காட்சிக்குக் காட்சி தெளிவாய் தெரிகிறது. கடலும் கடல் சார்ந்த வானமும் என்பதால் நீல நிறம் அப்படியே ஒன்றிப் போகின்றது. மஞ்சள்நிற Tone இற்கதான் பார்த்து பார்த்து மெனக்கட்டு இருக்கிறார்கள். நாயகியின் உடையில் இருந்து விளையாடிக் கொண்டு இருக்கும் கரம் போர்ட் டிஸ்க் வரையில் சரியான இடங்களில் மஞ்சள் நிறம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. (கதாநாயகிக்கும் அவரது நண்பிக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான மஞ்சள் உடையை பாவித்ததை தவிர்த்து இருக்கலாம்)

இயக்குநர் கைத்தட்டு பெறும் இடங்கள்.

1. போகிற போக்கில் துருத்தி கொண்டு தெரியாமல் பயன்படுத்தி இருக்கும் word play "நான் லூசு தாண்டா ஆனா நீங்க சாமை லூஸ் பண்ணிடாதீங்க"

2. "கம்மாறிஸ்", "உனக்கென்ன விசரே பிடிச்சிருக்கு", "பெக்கோ" , "அந்தோனியாரான", "எனக்கு நீ ஓகே" என்று பலராலும் யாழ்ப்பாணம் எங்கும் பாவிக்கப்பட்ட, சமூக வலைத்தள கலப்படமற்ற பிரதேச மொழியை திணிக்காமல் லாவகமாக கையாண்டது.

3. பக்காவான பாத்திர தெரிவு. நாயகன், நாயகி என்று மட்டுமில்லாமல் அத்தனை துணை நடிகர்களிடமும் இருந்து தேர்ந்த நடிப்பை வெளிக்கொணர்ந்து இருக்கிறார்.

இன்னும் கொஞ்சம் கவனித்து இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றிய இடங்கள்.

1. நாயகியின் வீட்டில் இடம் பெறும் காட்சிகளில் Frame முழுமையாக fill ஆகவில்லையே என்று எண்ணத் தோன்றுகிறது.

2. ஒரு சில காட்சிகளில் கேமரா stability கொஞ்சம் அதிகமாகவே ஆட்டம் காண தொடர்ந்து பார்க்கும் போது லேசாக உறுத்துகிறது.

ஆனால் கதையின் ஓட்டத்தில் இவை பெரிதாக துருத்திக் கொண்டு தெரியவில்லை. ஒரு இயக்குநரின் முக்கியமான வேலையே சக தொழில்நுட்ப கலைஞர்களிடம்சிறப்பாக வேலை வாங்குவது. அதை ஜீவதர்ஷன் மிகத் திறமையாக செய்துள்ளார். சாம் சூசைட் பண்ண போறான் என தொடங்கி சாம் சூசைட் பண்ண போனான் என முடித்தது. ஒட்டுமொத்த கதையையும் ஒற்றை வரியில் புரிய வைக்கும் புன்னகையுடன் கூடிய இந்த முயற்சி ஈழத் தமிழ் சினிமாவின் அடுத்த கட்ட பாய்ச்சல்.

அந்த பர்ஸை விழுத்தி விட்டு செல்லும் சீனாகட்டும் கேரம்போர்ட் விளையாடிக கொண்டு இருக்கும் போது பின்னணியில் கேட்க்கும் வானொலி செய்தியாகட்டும் அவ்வளவு ஏன் சூசை கடலில் இருந்து வெளியே வரும் சீன் கூட பின்னர் படத்தை கனெக்ட் செய்து பார்க்க, அவ்வளவு பிரமிப்பு ஊட்டும் விதமாக இருந்தது.

**மார்க்கண்டு ரேகாதீபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் பஞ்சம் ஒருபுறம் ஏவுகணை சோதனைகள் மறுபுறம்

## வடகொரியாவில் நடப்பது என்ன?



கடும் உணவுப் பஞ்சம் நிலவும் ஒரு நாட்டில், அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகள் நடத்தப்பட்டதாக இதுவரை வரலாறு இல்லை. ஆனால், அந்த வரலாற்றை மாற்றி எழுதுவோம் என வம்படியாக அணு ஆயுத ஏவுகணைச் சோதனைகளைச் செய்துகொண்டிருக்கிறது உணவுப் பஞ்சத்தில் சிக்கியிருக்கும் வடகொரியா. ஜனாதிபதி கிம் ஜங் உன், வறுமையில் வாடும் வடகொரிய மக்களைக் கண்டுகொள்ளாமல், தன் நாட்டின் இராணுவ பலத்தை உலகுக்குக் காட்டவே முயன்று வருகிறார். என்ன நடக்கிறது வடகொரியாவில்?

**செயற்கைக்கோள் புகைப்படங்கள்!**

பல உணவுப் பஞ்சங்களைச் சந்தித்த நாடுதான் வடகொரியா என்றாலும், 1994 முதல் 1998 ஆம் ஆண்டு வரை அந்த நாடு கண்ட உணவுப் பஞ்சம் மிகக் கடுமையானது. அதில், ஆறு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். மீண்டும் அப்படியான பஞ்சத்தை நோக்கித்தான் தற்போது அந்த நாடு நகர்ந்து கொண் டிருக்கிறது.

தன் அண்டை நாடான வடகொரியாவில் ஏற்பட்டிரு க்கும் கடும் உணவுப் பஞ்சம் குறித்து முதலில் வெளி யுலகுக்குச் சொன்னது தென்கொரியாதான். 2021, 2022 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப் படங்களை வெளியிட்டு, வடகொரியாவில் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதை விளக்கியிருக்கின்றனர் தென்கொரிய அதிகாரிகள். 2021 ஆம் ஆண்டை விட 2022 இல் சுமார் 1,80,000 தொன் அளவுக்கு உணவு உற்பத்தி குறைந்திருப்பதாகவும் தென்கொரியா தெரி வித்திருக்கிறது.

தென்கொரியாவின் இந்தத் தகவல்களை உறு திப்படுத்தும் வகையில் வடகொரிய அரச ஊடகமான கே.சி.என்.ஏ. "விவசாயக் கொள்கைகளில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவர, நாட்டின் மூத்த அதிகாரிகள் ஒன்றுகூடி விவாதிக்கவிருக்கின்றனர். நாட்டில் அதிகரித்துவரும் விவசாயப் பிரச்சினைகளுக்கு மத்தியில், இது ஓர் அவசரமான கூட்டம்" என்று செய்தி வெளி யிட்டிருக்கிறது.

**எப்படி ஏற்பட்டது உணவுப் பஞ்சம்?**

வறட்சி, வெள்ளப்பாதிப்பு, காலநிலை மாற்றம் போன்ற தீவிரப் பிரச்சினைகளால் வடகொரியாவின் உணவு தானிய உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. கொரோனா காலத்தில் ஜனாதிபதி கிம் ஜங் உன் தேவையற்ற, மிகக் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததையும் ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். "கொரோனா தொற்றுக்குப் பிறகு, தன் நாட்டின் அனைத்து எல்லைகளையும் மூடிவிட்டது வடகொரியா. இதனால் பிற நாடுகளுடனான ஏற்றுமதி, இறக்குமதி தடைப்பட, கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. 'உலக நாடுகளை அச்சுறுத்தும் வகையில் அணு ஆயுதச் சோதனைகளைத் தொடர்ந்து நடத்திவருவதால், பல நாடுகள் வடகொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருக்கின்றன. இதனால், வடகொரியாவுக்குக் கிடைத்து வந்த மனிதநேய உதவிகளும் குறைந்து விட்டன. எனவே தான், தற்போது வறட்சியால் ஏற்பட்டிரு க்கும் உணவுப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறது வடகொரிய அரசு' என்கிறார்கள் வடகொரியப் பிரச்சினைகளை உற்றுநோக்கும் பத்திரிகையாளர்கள்.

வடகொரியா கடும் உணவுத் தட்டுப்பாடு காரணமாக வடகொரிய மக்கள் மக்காச்சோளத்தை வாங்கி உண்பதால், மக்காச்சோளத்தின் விலை 20% அதிகரித்துவிட்டது. தட்டுப்பாடு காரணமாக மற்ற உணவுகளின் விலையும் விண்ணை முட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. 'தென் கொரியா, அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்று அகதிகளாக வாழும் வடகொரிய மக்களின் மறுவாழ்வுக்கு வேண்டி யதைச் செய்துவருகிறது 'லிபர்ட்டி இன் நார்த் கொரியா' என்ற அமைப்பு. இந்த அமைப்பின் தென்கொரியக் கிளையின் இயக்குநர் சோகீல் பார்க் "வடகொரிய மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருப்பதாக எங்களுக்கு நம்பத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன" என அதிர்ச்சியைக் கிளப்பியிருக்கிறார். இருந்தும், மக்கள் படும் அவதிகளையெல்லாம் துளியும் கண்டுகொள்ளாத அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜங் உன், அணு ஆயுதச் 'சோதனைகளை இடைவிடாமல் நடத்தி வருகிறார்.

**தொடரும் அணு ஆயுதச் சோதனைகள்!**

2022 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 70 ஏவு கணைகளை வடகொரியா சோதனை செய்தி ருப்பதாகத் தெரிகிறது. கடந்த பெப்ரவரி 23 அன்றுகூட, கண்டம்விட்டு கண்டம் பாயக்கூடிய நான்கு சக்தி வாய்ந்த அணு ஆயுத ஏவுகணைகளை அடுத்தடுத்து விண்ணில் ஏவியிருக்கிறது வடகொரியா. இதை, அந்நாட்டின் அரச ஊடகமான கே.சி.என்.ஏ உம் உறுதிப்படுத்தியிருக்கிறது. இதுபோக, சொந்த நாட்டு மக்களையே அச்சுறுத்தும் சில சட்டங்களையும் வகுத்து வருகிறது வடகொரியா. கடந்த சில தினங் களுக்கு முன்புகூட, 'வடகொரிய மக்கள் யாரும் என்னுடைய மகளின் பெயரான 'ஜூஏ' என்ற பெயரை வைத்துக்கொள்ளக் கூடாது. வைத்தி ருப்பவர்கள் அனைவரும் மாற்றிக்கொள்ள வேண் டும்' என கிம் சட்டம் கொண்டுவந்ததாகச் செய்திகள் வெளியாகின.

"மக்கள் பிரச்சினைகளைக் கண்டு கொள்ளா மல், இராணுவத்துக்கு அதிக அளவு பணம் செலவ ழிப்பதும் கடுமையான சட்டங்கள் விதிப்பதற்கு நேரம் செலவழிப்பதும்தான் தற்போது வட கொரியாவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக் கடிக்கும் உணவுப் பஞ்சத்துக்கும் முக்கியக் காரணம்" என்கிறார்கள் தென்கொரியப் பத்தி ரிகையாளர்கள்.

இந்த நிலையில், வடகொரிய அரச நாளி தழான Rodong Simmun "உணவுத் தட்டுப்பாட்டைச் சமாளிக்க வெளிநாடுகளிடம் உதவி கோருவது என்பது விஷ மிட்டாயை உண்பதற்குச் சமம். ஏகாதிபத்தியவாதிகள் நமக்கு உதவி செய்வதைப்போல பொறிவைத்து, நம்மை அடிபணியவைப்பதற்கும், நம்மிடம் கொள்ளையடிப்பதற்கும் முயல்வார்கள்" என்று செய்தி வெளியிட்டிருக்கிறது. சில ஏகாதிபத்திய நாடுகள், உதவி செய்வதைப்போல மற்ற நாடுகளை அடிமைப்படுத்த முயல்வது உண்மைதான் என்றாலும், பஞ்சத்திலிருந்து மீள தற்போது வடகொரியாவுக்குக் கட்டாயமாக மற்ற நாடுகளின் உதவி தேவை" என்று அடித்துச் சொல்கிறார்கள் சர்வதேச அரசியல் வல்லுநர்கள்.

உலக நாடுகளின் உதவிகளை உத றித்தள்ளும் வடகொரியா, இந்தப் பெரும் பஞ்சத்திலிருந்து எப்படி மீளப்போகிறது என்ற கேள்விக்கான விடையை, காலம்தான் சொல்ல வேண்டும்

அவுஸ்திரேலிய வீராங்கனையான பெத் மூனி பத்திரிகையாளர்களைச் சந்தித்திருந்தார். பலரும் பல கேள்விகளை வரிசையாக அடுக்கினர். ஒரு பத்திரி கையாளர் கேட்ட கேள்வி மட்டும் கொஞ்சம் வித்தியா சமாக சுவாரஸ்யமாக இருந்தது. "ஒரு கற்பனையான உலகத்தை நினைத்துக் கொள்ளுங்கள். அதில் நீங்கள் ஓர் அணிக்கு பயிற்சியாளராக இருக்கிறீர்கள். உங்களின் அந்த அணி அவுஸ்திரேலியாவை எதிர் கொள்கிறது. அவுஸ்திரேலியாவை வெல்ல நீங்கள் என்ன ஆலோசனையை வழங்குவீர்கள்?" என்பது தான் கேள்வி.

"நீங்க ஆடுறதுக்கே போகாதீங்க. அவங்கள ஜெயிக்கிறது ரொம்ப கஷ்டம். போட்டிக்குப் போகாமல் இருக்குறதுதான் உங்களுக்கு நல்லது" எனக் கூறுவேன் எனப் பதில் சொல்லிவிட்டு பெத் மூனி பலமாகச் சிரித்தார். கேட்பதற்கு ஆணவமான பேச்சை போலத் தோன்றும். ஆனால், இன்றைய திகதிக்கு பெண்கள் கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியா இத்தகைய ஆதிக்கத்தைத்தான் செலுத்தி வருகிறது. தென்னாபிரிக்காவை வீழ்த்தி ஆறாவது முறையாக இருபது-20 உலகக்கிண்ணத்தை வென்றிருக்கிறது. உலகக்கிண்ணத்தை கைப்பற்றுவதில் அவுஸ்திரேலியா அடிக்கும் இரண்டாவது ஹாட்ரிக் இது. அதிக ஐ.சி.சி கோப்பைகளை வென்ற கப்டன்களின் வரிசையில் ரிக்கி பாண்டிங், தோனியையெல்லாம் பின்னுக்குத் தள்ளஅவுஸ்திரேலிய கப்டன் மெக் லேனிங் முதலிடத்தை பிடித்திருக்கிறார். இத்தனையையும் மனதில் வைத்து பார்த்தால் பெத் மூனியின் அந்தப் பதில் நிச்சயமாக ஆணவத்தின் வெளிப்பாடாகத் தெரியாது.

நியூலாண்ட்ஸின் கேப்டவுனில் நடந்த அந்த இறுதிப் போட்டியில் உண்மையிலேயே தென்னாபிரிக்கா அணி க்குத் தான் அதிக ஆதரவு இருந்தது. தென்னாபிரிக்கர் களின் கண்ணீரைக் கண்டிராத உலகக்கிண்ணத் தொடரே இல்லை. எல்லா உலகக்கிண்ணங்களுமே அவர்களுக்கு சோகத்தின் வடுக்களாகத்தான் இருந்திருக்கின்றன. அப்படி ஒரு சூழலில் சீனியர் கிரிக்கெட்டில் முதல் முறையாக தென்னாபிரிக்காவை சேர்ந்த ஒரு அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருக்கிறது எனும்போது இயல்பிலேயே அவர் களின் மீது ஒரு ஈர்ப்பு ஏற்படத் தொடங்கியிருந்தது. அதற்கு ஏற்ற வகையில் அரையிறுதிப்போட்டி வரைக்குமே கூட தென்னாபிரிக்க அணி சிறப்பாகத்தான் ஆடியிருந்தது.

அவுஸ்திரேலியாவை வீழ்த்தி முதல் முறையாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றிவிடுவார்கள் என்றே பலரும் நினைத்தனர். ஆனால், கணிப்புகளையும் விருப்பங்களை யெல்லாம் கடந்தும் அவுஸ்திரேலியா வென்றிருக்கிறது. இறுதிப்போட்டி என்பது யுத்தக்களம். இங்கே விருப்பு வெறுப்புகளைக் கடந்து களத்தில் திறம்படச் செயற்படு பவர்களால் மட்டுமே வெல்ல முடியும் என்பதை அவுஸ்திரேலியா மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறது.

ஆறு உலகக்கிண்ண வெற்றிகளில் இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை மூன்று முறையும் நியூசிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளை தலா ஒரு முறையும் அவுஸ்திரேலிய அணி வீழ்த்தியிருக்கிறது. அவுஸ்திரேலியா வீழ்த்தியது அனைத்துமே டாப் அணிகள் தான். இறுதிப் போட்டியில் அத்தனை அழுத்தங்களையும் தாண்டி இப்படி முழுமையாக ஆதிக்கம் செலுத்துவதெல்லாம் அசாத்தியம். "உங்களின் சிரிப்பைப் பார்த்தால் எரிச்சலாக இருக்கிறது. ஆனால், நீங்கள்தான் இந்தப் பெண்கள் கிரிக்கெட்டுக்கான முன்னுதாரணம். உங்களின் வெற்றிக்கு வாழ்த்துகள்" என தென்னாபிரிக்க கப்டன் சுனே லூயிஸ் அவுஸ்திரேலிய வீராங்கனைகள் குறித்து பேசியிருக்கிறார். சுனே லூயிஸின் வார்த்தைகள் நிஜமானவை. இந்த அவுஸ்திரேலிய அணியைப் பிடிக்காவிட்டாலும் அவர்களைப் புறந்தள்ளிவிடவே முடியாது. பெண்கள் கிரிக்கெட்டுக்கான பெரிய இன்ஸ்பிரேஷன் இந்த அணி!


## ஆதிக்கம் செலுத்தும் உலக சம்பியன்ஸ் அவுஸ்திரேலியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளும் கானலே

இன்பத்தில் கைகொடுக்கும் உறவு உறவாகாது
துன்பத்திலும் தோள் கொடுக்கும் உறவே உறவு
இழப்பின் போது ஆறுதல் சொல்லி
நாம் அழும் போது அவர்கள் கண்களிலும்
ஈரம் தெரிவதாயின் அதுவே உன்னத அன்பு
"நாங்கள் இருக்கின்றோம்" என்று கூறுவது
ஒரு சில உறவுகளின் வாய் வார்த்தையே...
இழப்புகளும் இறப்புகளும் உணர்த்தும்
உறவின் மகத்துவத்தை தூரத்தே இருப்பது போல் தெரியும்
நீரின் விம்பம்
அருகே சென்றதும் எவ்வாறு கானலோ
அது போலவே ஒரு சில உறவுகளும்
நெருங்கி அருகே செல்லத்தான் புரியும்
உறவுகளும் கானலே என்று



புல்பாகரன், பிரமிலா.

# குறைகூறும் மனிதர்கள்



குறைகூறி குறைகூறி குறைந்து போன மனிதர்கள்
பிறரை குறை கூறி தம்மை நிறைவாகக் காட்டும்
அவர்கள்
தம் குறை என்று அறிவார்களோ?
நின்றால், நடந்தால், பார்த்தால், கதைத்தால் குறை கூறும் அவர்கள்
தம் குறை என்று அறிவார்களோ?
அதனால், இதனால் என்றெல்லாம் குறைகூறும் அவர்கள்
தம் நிலை என்று அறிவார்களோ?
நடந்தவவை, முடிந்தவை, கடந்தவை பற்றி எல்லாம்
குறை கூறும் அவர்கள்
தம் நிலை என்று அறிவார்களோ?
உனக்கு நான் குறை
எனக்கு நீ குறை
நமக்கு அவன் குறை
அவனுக்கு எவன் குறையோ
நம் குறைகளை குறைத்து
பிறர் குறைகளை மறந்து
குறைகுறை என குறைக்காது
பிறையை ரசிப்பது போல்
பிறரையும் ரசிப்போம்

ச.துவாரகன்.
சட்டக் கல்லூரி மாணவன்.

# இனிமைக்கும் தமிழ் என்று பேர்



அகரம் தமிழிற்கு சிகரம் அழகில்
ஆயகலை அறுபத்து நான்கும் செழிக்கும்
இனிமைக்கும் தமிழ் என்று பேர் அதன்
ஈடில்லா பெருமைக்கு நிகரில்லை கேள்

உலகினில் முதன்மொழி தமிழே என்றும்
ஊருலகம் யாவிலும் புகழ் தந்த பேரே
எண்ணோ டெழுத்துந்தன் விழியே பாரில்
ஏற்றங்கள் தருவதே தமிழ் எனக் கூறும்

ஐயமில்லா செம்மொழி தமிழே ஏழ்
ஒலியோடு இசைவென்று புவி ஆளும் மொழியே
ஓங்கார இசைக்குள்ளே ரீங்காரம் செய்யும்
ஔடதம் தமிழ் போல மொழி வேறு ஏது?

இயல், இசை, நாடகம் ஆனால் இங்கு
ஈடில்லா கலைஞானம் விதந்திடச் செய்தாய்
உலகிற்கே சொல்வளம் ஈந்தாய் ஏற்றம்
ஊற்றெடுத்தே ஒளிர் ஓங்கிட வைத்தாய்

நிகரற்ற கலைவளம் தந்தாய் என்றும்
ஈடில்லா புகழ் கொண்டு புவி ஆளலானாய்
இகமதில் ஈடற்ற சேய்களைப் பெற்று
கனிவான இசையூட்டி வென்றாய் என்றும்
இனிமைக்கும் இனிமையே நீயாகி நின்றய்

வளவை வளவன்.

## மௌனத்தின் தேடல்- 599



# உனக்கே உரமாவான்

மூச்சாய் உணவாய் மருந்தாய்
அக்கினியாய் ஆடையாய் இல்லமாய்
உயிராய் உலகை ஓம்பும்
உன்னை உணராது கொன்றவனை
பூமித்தாய் உனக்கே உரமாக்குவாள்.

பிரமன்.
கொக்குவில்.

# சிறிது ஆறுதலே

புவியின் இயல்பு குழம்பினாலென்ன?
உயிர்கள் அழிந்தாலென்ன
பணமே பிரதானம் என்றும்
பண முதலைகளுக்கு - அதனால்
பூமியின் நுரையீரலையே அறுத்து
காசாக்குகின்றனர்
ஆனாலும் நலன்விரும்பிகள்
தாவரங்கள் நடுகை செய்வது
உலகிற்கு சற்று ஆறுதல் தான்

சி.இ.அன்புதுரை.
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 600



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# மரங்களால் மட்டுமே

காடுகள் அழித்துக்
களனிகள் செய்தோம்
கெடுத்தோம் வனஜீவராசிகளின்
வாழிடம் பறித்தோம்
காற்றைக் கெடுத்தோம்
இயற்கையை வளமாக்குவது
மரங்களால் மட்டுமே
முடியுமாம் மனித
மரங்களை ஏது தான்
முடியும் அழிவைத் தவிர.

வை.க.தவமணிதாசன். நல்லூர்.

# இனி ஒரு விதி செய்வோம்

ஏய் மூட மானிடனே!
இயற்கையிடம் பகைத்துக் கொள்ளாதே
இந்தச் சின்னப் பிள்ளையின் மரம் நடும் பண்பு
மரங்களை வெட்டுகின்ற இராட்சதனிடம் இல்லையே
இயற்கையின் சீற்றத்தின் வெளிப்பாடே
மழைவீழ்ச்சிக் குறைவு, பூகம்பம், கடும் வெப்பம்
இத்தனைக்கு மத்தியிலும் மனித குலம் படும்பாடு
இனி ஒரு விதி செய்வோம்
மரம் நாட்டுவோம் வளம் பெறுவோம் என

கும்பவாழியான். உடுப்பிட்டி.

# பாடம்

நம் உலகத்திற்கு மழை தரும் மரங்களை
வகை தொகையின்றி
கோடரியால் வெட்டி அழித்து
இப்படி மரக்குற்றியாய்
தூக்கிச் செல்லும் பெரியவரே
உன் அருகே நல் உள்ளத்துடன்
மண்ணில் செடியை
வளர்க்கச் செல்லும் இந்தப் பள்ளிச்
சிறுமியைப் பார்த்தாவது நீ பாடம் படி
அதனால் உன் வாழ்வில்
துன்பங்கள் இல்லை இனி

சுப்பிரமணியம் ஜெயரூபன், பருத்தித்துறை.

# மண்ணிற்கு மகிமை

மரம் கடத்தும் மனிதர்களால்
பசுமை நிறைந்த நிலங்கள்
பாலைவனமாய் போகின்றது
இங்கே ஒரு தளிர்
குருத்து ஒன்றை நடுவது
மீண்டும் மண்ணிற்கு பசுமை

பி.மதுஷ்சன்.
தையிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 58

# கடல் புறா

## புதிய பொறுப்பு

வாள்போர் தொடங்கிய விநாடியிலிருந்தே ஆசனத்தை விட்டு வேறுபக்கம் வந்துவிட்ட பலவர்மன் அத்தனைக்குப் பிறகும் திரும்ப ஆசனத்தை நாடாமல் நின்ற இடத்திலேயே நின்றான். வில்வலன் இருந்த வரையில் கட்டுண்டு கிடந்த அவன் உணர்ச்சிகள் வில்வலனின் தலை மறைந்ததும் சிதறிவிடவே இளையபல்லவனை எரித்து விடுவது போல் பார்த்தன அவன் கண்கள்.

"இளையபல்லவரே! இன்றைய நிகழ்ச்சியில் நீங்கள் நெருப்பை அணைத்து விட்டதாக மனப்பால் குடிக்க வேண்டாம். இப்பொழுதுதான் நெருப்பைக் கிண்டி விட்டிருக்கிறீர்கள். அந்த நெருப்பு இந்தக் கோட்டை, இங்குள்ள மக்கள், உமது கப்பல் அனைத்தையும் சுட்டெரிக்கப் போகிறது. இதுவரை வருடா வருடம் ஒருநாள் மட்டும் இந்தக் கடற்கரையில் சில கொலைகள் நடக்கும். இனி ஒவ்வொரு நாளும் கொலை, களவு, மக்கள் கடத்திச் செல்லப்படுதல் அனைத்தும் அக்ஷய முனையில் நடக்கும். பதக் இனத்தாரின் பழி வாங்கும் சுபாவம் எத்தன்மையது என்பதை நாமனைவரும் வெகு சீக்கிரம் உணருவோம்" என்ற சொற்களைக் கனற் பொறிகள் போல் உதிர்த்தான் பலவர்மன்.

அவன் வார்த்தைகள் அங்கு குழுமியிருந்த கோட்டைக் குடிகளிடமும் கடற்கரைக் கொள்ளைக் கூட்டத்திடமும் மிகுந்த அச்சத்தை விளைவித்ததை அவர்கள் முகபாவங்களிலிருந்து கண்டுபிடித்த இளையபல்லவன். மிகுந்த நிதானத்துடன் பதில் சொன்னான். "மக்களைக் காக்க வேண்டியது மன்னன் கடமை. ஸ்ரீவிஜய மன்னனின் பிரதிநிதி இங்கு நீர். இங்கு நாகரிக நிர்வாகம் நடக்காததால் அநாகரிகப் பூர்வக்குடிகளின் கொடுமைக்குச் சாதாரண குடிமக்கள் பலியாக வேண்டியிருக்கிறது. உங்கள் காவலரைப் பலப்படுத்துங்கள். பலவர்மரே! ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தின் பிரதிதிதி ஒருவன் காட்டிமிராண்டிகளுக்குப் பயந்து அநாகரிக அரசாங்கம் நடத்தினான் என்ற அவப்பெயர் சரித்திரத்தின் ஏடுகளில் ஏறாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

மக்களின் துணிவும் அரசாங்கத்தின் திறமையும் இணைந்தால் சாதிக்க முடியாதது உலகத்தில் எதுவும் இல்லை. என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நான் இந்தக் கொள்ளையருடன் கடற்கரையில் தங்கப்போகிறேன்.

இன்னும் சில நாட்களுக்குள் இந்தக் கடற்கரையில் பூர்வக்குடிப் பிசாசுகளின் நடமாட்டம் ஒடுக்கப்படும். மனிதனைத் தின்னும் அந்த அநாகரிக வர்க்கத்தின் காற்று இந்தப் பக்கத்தில் அடிக்காது. நீங்கள் ஒத்துழைத்தால் கோட்டைக் குள்ளும் அவர்கள் நடவடிக்கையை நாங்களே ஒடுக்குவோம்."

மிகுந்த அலட்சியத்துடனும் துணிவுடனும் இளையபல்லவன் கூறிய அந்தச் சொற்களுக்குப் பதில் சொல்லும் நிலையில் பலவர்மன் இல்லை. அவன் உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்து சுழன்று கொண்டிருந்தன. அந்த இரவு நிகழ்ச்சியில் அதுவரை ஏற்படாத பல அரசியல் சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டதை அறிந்ததால் விபரமான பதிலேதும் சொல்லாமல், "மீண்டும் நாம் சந்திப்போம்" என்று கூறிவிட்டுக் கடற்கரையை விட்டுச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தன் வீரர்களுக்கு உத்தரவிட்டான் பலவர்மன். இரண்டே நிமிடங்களில் அவனது பொன்னிறப் புரவியும் மஞ்சளழயின் வெண்ணிறப் புரவியும் கொண்டு வரப்பட்டன. தனது புரவியில் ஏறிக்கொண்ட பலவர்மன் அனைவரும் செல்லலாம் என்பதற்கு அறிகுறியாக கூட்டத்தை நோக்கிக் கையை ஆட்டினான்.

அதுவரை பலதரப்பட்ட உணர்ச்சிகளின் வசப்பட்டு நடன மேடையில் நின்ற மஞ்சளழகி மேடையை விட்டு இறங்கித் தனது புரவியருகில் வந்தாள். இளையபல்லவன் அவளை அணுகி அவளுக்குக் கைலாகு கொடுத்து இடையையும் மற்றொரு கையால் தாங்கி அவள் புரவி மீது ஏற உதவினான்.

(தொடரும்)

# மன நலம் காப்போம்



மனநலம் என்பது நம் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒன்றாகும். நம்முடைய மனநலம் ஆரோக்கியமாக இருந்தால் தான், நாம் எதை வேண்டும் என்றாலும் சிறப்பாக செய்ய முடியும்.

உங்களுக்கு அந்த மாதிரி மனநல பிரச்சினைகள் அல்லது ஒருவித மகிழ்ச்சி இல்லாத தருணமாக உணர்வது, அல்லது எப்பொழுதும் ஒரு இறுக்கமான மனநிலையை உணர்ந்தால், அதிலிருந்து வெளிவர பெரிய விடயங்கள் எல்லாம் ஒன்றும் வேண்டாம்.

சின்னச் சின்ன விடயங்கள் தான். முயற்சி செய்து பாருங்கள்:

1. மொபைல் போன்கள் பயன்பாட்டை முடிந்தவரை குறைத்துக் கொள்ளுங்கள். எந்நேரமும் சோசியல் மீடியாவில் இருப்பது மனநல பிரச்சினைகளில் முக்கியமானதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள்.

2. உங்கள் மனதுக்கு பிடித்தவர்களிடம் மனம் விட்டு பேசுங்கள். உங்கள் மனநிலைகளில் என்ன குழப்பங்கள் இருக்கோ, அதை வெளிப்படையாகப் பேசுங்கள் அவர் உங்களுடைய நம்பிக்கைக்கு உரியவராக இருப்பாரா என்பதை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

3. சுற்றுலாத் தலங்களுக்கு செல்லுங்கள். பிடித்தமான இடங்களில் நின்று மகிழ்ச்சியான புகைப்படங்களை எடுத்துக் கொள்ளுங்கள். இயற்கை என்பது மனதை அமைதிப்படுத்த கூடிய மிக முக் கியமான பங்களிப்பை செய்கின்றது.

4. காக்கா, குருவிகள், புறா உள்ளிட்ட பறவைகளுக்கு உணவளியுங்கள். அது கூடும் இடங்களில் தாகத்திற்கு நீர் வையுங்கள்.

5. உங்களிடம் இருக்கும் பொருட்களில் தேவைக்கு போக, மிஞ்சியது இருந்தால், இல்லாதவர்களுக்கு தேடிச்சென்று கொடுங்கள். இது நாம் என்ன நிலையில் இருக்கின்றோம் என்பதை உணர வைக்கும்.

6. நீங்கள் செல்லும் வழிபாட்டு தளங்களில் நிற்கும் வழிப்போக்கர்களுக்கு அதிகம் தான தர்மங்கள் செய்யுங்கள்.

7. உங்களுக்கென்று நல்ல நட்பு வட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். நல்லது, கெட்டது எதுவென்றாலும் அவர்களை தொடர்பு கொள்ளுங்கள்.

8. நீங்கள் விரும்பிய புத்தகங்களை அல்லது பக்தி நூல்களை தினமும் குறைவான நேரம் வாசித்தாலும் அதை தினமும் செய்யுங்கள்.

9. தினமும் காலை உடற்பயிற்சி செய்யுங்கள் அல்லது உங்களுக்கு பிடித்தமான விளையாட்டை விளையாடுங்கள்.

10. வாய்ப்புகள் இருந்தால் வீட்டில் பறவைகள் வளருங்கள் அல்லது வீட்டுத் தோட்டம் அமையுங்கள்.

இதுவெல்லாம் மன அழுத்தத்தை குறைத்து, மன நிம்மதியை தரக்கூடிய எளிய வழிமுறைகள் ஆகும். வாய்ப்பிருந்தால் இதை நீங்கள் பின்பற்றி, மன அழுத்தம், மனச் சோர்வு, மனக்கவலைகளில் இருந்து நீங்கி, நிம்மதியான வாழ்க்கையை பெறுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'


# சுகமான விடியல்

332

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# ஆன்மிகமும் அறிவியலும் இரு துருவங்கள் அல்ல

மனிதனை நெறிப்படுத்தி சுகமும் பலமும் பொருந்திய ஒரு முழு மனிதனாக வாழ்வதற்கு அனைத்து மதங்களும் வழிகாட்டி நிற்கின்றன. உலக சுகாதார அமைப்புகள் பலவும் மனிதனின் உண்மையான சுகம் என்றால் என்ன? மனிதனின் உண்மையான ஆரோக்கியம் என்றால் என்ன? என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மிக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதார விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.



மதங்களினதும் மருத்துவத்தினதும் அடிப்படைத் தத்துவம் "அன்பு, பரிவு, ஒருவனுக்கு உண்மையான சுகத்தையும் நலத்தையும் கொடுப்பது" என்ற அடிப்படையில் ஒன்றுபடுவதை நாம் அறிவோம். மருத்துவம் ஒருவனுக்கு இந்தப் பிறப்பிலே அன்பும் ஆதரவும் சுகமும் நலமும் கொடுப்பதைப் பற்றி சிந்திக்கிறது. செயலுருவம் கொடுக்கத் துடிக்கிறது. ஆனால் மதங்கள் இம்மையிலும் மறுமையிலும் அவனின் உடலினதும் ஆன்மாவினதும் சுகம் பற்றியும் நலன் பற்றியும் சொல்லி அதற்கான வழியைக் காட்டி நிற்கின்றன. உண்மையான ஆன்மிகமும் அறிவியலும் இரு துருவங்கள் அல்ல. ஒருவனுள் இருந்து துடித்துக் கொண்டிருக்கும் நம்பிக்கைச் சுடரே ஒரு ஆரோக்கியமான விடியலைக் கொடுக்கின்றது.

ஆன்மிகத்தை அறிவியல் கண்ணோடு நோக்கும் போது பல பல சுவாரசியமான விடயங்கள் வெளிச்சத்துக்கு வருவதை அவதானிக்கின்றோம். மதங்கள் பற்றிய இந்தப் புரிதல் ஒரு சமூகத்தின் சுகாதார நிலையை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும். இந்தத் திசையிலான எமது தேடல் பயனுடையதாக அமையும்.

மனிதன் எப்பொழுது தோன்றினான்? மதங்களும் அதன் தத்துவங்களும் எப்பொழுது தோற்றம் பெற்றன? மருத்துவ முறைகளும் வைத்தியமும் எப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டன? அறிவியலும் விஞ்ஞானக் கருத்துக்களும் எவ்வாறு முக்கியத்துவம் பெற ஆரம்பித்தன? என்பது சம்மந்தமாக தெளிவுபெற வேண்டிய தேவை இருக்கிறது. மனிதகுலம் இந்தப் பூமியிலே அவதரித்து 5000 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. மதக்கருத்துக்களும் தத்துவங்களும் வெவ்வேறு காலப்பகுதிகளில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இந்து சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் கி.மு. 3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகிர்கின்றன. ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். அக்காலப்பகுதியில் மருத்துவப் பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த்தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் பல கிடைக்க பெற்றிருக்கின்றன.

இற்றைக்கு 5500 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.மு 3500 வருடங்களுக்கு முன்பே நடைமுறையிலிருந்த மருத்துவ முறைகளும் மனித ஆரோக்கியத்தைப் பேணும் நடவடிக்கைகளும் முதன்முதலாக எப்பொழுது தோற்றம் பெற்றன என்பது சம்பந்தமான தெளிவான ஆதாரங்கள் இல்லை. ஆனால் மதத்தின் தத்துவங்களும் ஆன்மிகக் கருத்துக்களும் மருத்துவம் வளர்ச்சி பெறுவதற்கு முன்பே தோற்றம் பெற்றிருப்பதற்கான சாத்தியக்கூறுகளே இருக்கின்றன.

மதங்களுக்கும் மருத்துவத்திற்கும் இடையிலான நெருக்கம் எவ்வளவு இறுக்கமானது என்பதை நாம் அனைவரும் அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். இது மனித குலத்தின் ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும். மன அமைதியும் ஆரோக்கியமும் வேண்டிநிற்கும் மனிதர்கள் ஆன்மிகத்துறையிலே நாட்டம் கொள்வதும், மதநிறுவனங்களும் ஆன்மிக நிறுவனங்களும் மருத்துவச்சேவைக்குப் பெரும் பங்காற்றிவருவதும் மதத்திற்கும் மருத்துவத்திற்குமான நெருக்கத்தைக் காட்டிநிற்கின்றன.

பல கிறிஸ்தவ மத நிறுவனங்களும் இந்துமத நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும்பங்காற்றிவருகின்றன. உளவளத் துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. பல மதம் சார்ந்த அமைப்புகள் மருத்துவமனைகளையே வழிநடாத்திவருகின்றன. இவ்வாறாக மதத்திற்கும் மருத்துவத்திற்குமான நெருக்கம் எப்பொழுது ஏற்பட்டது? இது சம்பந்தமாக எமது பண்டைய நூல்களிலே என்ன சொல்லப்பட்டிருக்கின்றன? என்பதை ஆராயும்பொழுது பல வியத்தகு தகவல்களை நாம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்துமதக் கருத்துக்கள் ஒரு முகப்படுத்தப்பட்டு அது இந்துமதமாகத் தோற்றம்பெற்றது கி.மு.1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேதகாலம் என்று சொல்லுவார்கள். இந்த வேத காலத்திலே மதப்பெரியவர்கள் மருத்துவத்தொண்டையும் ஆன்மிகத் தொண்டையும் ஒருங்கே ஆற்றிவந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன. தற்போது நடைமுறையில் இருக்கும் இந்துமதக் கருத்துக்கள் அடிப்படையிலே வேதங்களையும் தொடர்ந்துவந்த உபநிடதங்களையும் குருமார்களின் அறிவுரைகளையும் அத்திபாரமாக வைத்தே வளர்ச்சி பெற்றிருக்கின்றன என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

மனிதன் நாகரீகத்திலே வளர்ச்சி பெற்றுவந்த இந்தக் காலப்பகுதியிலே நல்ல பல கோட்பாடுகளுடன் இன்னும் பல மதங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற மதங்கள் மனிதனின் உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலைக்கான பாதையைக் காட்டி நிற்கின்றன.

ஆதிகால மருத்துவமுறைகளிலே சித்தமருத்துவமானது மிகவும் முக்கியமான மருத்துவமுறையாகக் கருதப்படுகிறது. இது அன்றுதொட்டு இன்று வரை பலருக்கு ஆரோக்கியத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறது. இது திராவிடர்களின் மருத்துவமுறையாக வளர்ச்சி பெற்றிருப்பதால் இன்றும் தமிழர்களுக்கு பெருமை சேர்த்து நிற்கிறது. இந்த சித்தமருத்துவமானது எப்படித் தோற்றம் பெற்றது? இதன் அடிப்படைக் கருத்துக்கள் எங்கிருந்து கிடைக்கப் பெற்றன? இதற்கும் மதம், ஆன்மிகம் என்பவற்றிற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்பதை நோக்குவோம்.

சித்த மருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்தி அதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. இந்த சித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். இந்த அகத்தியரின் தலைமையிலேயே சித்த மருத்துவம் முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த சித்த மருத்துவத்துறையின் தோற்றம் பற்றிய இந்த கருத்துக்களை நம்புகிறோமோ என்பது முக்கியமல்ல. இது அவசியமும் இல்லை. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

உலகினதும் ஏன் இந்த அண்ட சராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது energy என்று சொல்லப்படுகின்ற சக்தி என்பது உலகறிந்த உண்மை. சக்தி இன்றி எதுவும் இயங்க முடியாது. அந்த சக்திதான் சிவனின் சரிபாதி என்றும் அவள் தான் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் இந்து மதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

மருத்துவக்கலையை ஆயகலைகள் அறுபத்தினான்கில் ஒன்றாக வகைப்படுத்தியிருக்கிறார்கள். (தொடரும்)

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரியுடன் மற்றுமொரு கப்பல் இன்று வருகை

(கொழும்பு)

மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரியுடன் 16 ஆவது கப்பல் இன்று இலங்கையை வந்தடையவுள்ளதாக இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கை நிலக்கரி நிறுவன பொது முகாமையாளர் நாமல் ஹெவகே இதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை மின்சார உற்பத்திக்கு தேவையான நிலக்கரி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை தடையின்றி இலங்கைக்கு கொண்டு வரப்படும் என இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்களும் இலங்கையில் பங்குகளை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலக்கரி ஏற்றிச் செல்லும் 16 ஆவது கப்பல் இன்று நாட்டை வந்தடைய உள்ளதாக திருநாமல் ஹெவகே குறிப்பிட்டுள்ளார். (4)

# தொடர் வீழ்ச்சியில் தங்கத்தின் விலை

(கொழும்பு)

உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது.

இதன்படி, நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 638,284.00 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இலங்கையில் கடந்த இரு மாதங்களாக தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகின்றது.

இந்த நிலையில், 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 180,150.00 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 165,150.00 ரூபாவாக பதிவாகியுள்ளது. அத்துடன் 21 கரட் தங்கப் பவுண் ஒன்று 157,650.00 ரூபாவாக பதிவாகியுள்ளது.

எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளில் இருந்து மாற்றம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதே வேளை, கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 200,000 ரூபாவை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தில் திருத்தம்

## அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்ற போர்வையில் ஆட்கடத்தலை தடுக்கவும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தவும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை திருத்தியமைத்து விதிகளை வலுப்படுத்த தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணியின் அவதானிப்புகளைப் பெறுவதற்கான விசேட கூட்டம் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது.

ஆட்கடத்தலை தடுக்கும் விதமாக, பணி நிமித்தமாக வெளிநாடு செல்பவர்களின் தகவல்களை டிஜிட்டல் மூலம் கோப்பு அமைப்பில் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட புதிய திருத்தங்களுடன், ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணியின் அவதானிப்புகளுடன் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை கடுமையாக்குவதற்கும் அதற்கேற்ப புதிய திருத்தங்களைச் செய்வதற்கும் முன்மொழிவுகள் தயாரிக் கப்பட்டுள்ளன. (4)


## தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பதற்கான நிலங்களைப் பகிரங்க ஏலத்தில் வழங்குதல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 2023 ஆம் ஆண்டு மகோற்சவ காலப்பகுதியில் (22.03.2023 தொடக்கம் 15.04.2023 வரை) தற்காலிக வியாபாரம் மேற்கொள்வதற்கான நிலங்களை பகிரங்க ஏலத்தில் வழங்கப்படவுள்ளது.

**காலம் :- 12.03.2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி**
**இடம் :- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றல்**

ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் ரூபா 500.00 இனை கேள்வி வைப்புப்பணமாகச் செலுத்தி 11.03.2023 ஆந் திகதிக்கு முன்னர் ஆலய முகாமையாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். ஏலத்தில் தேர்வு செய்யப்படுவோர் 20.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் முழுத் தொகையையும் செலுத்தி தமது தேர்வினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு: பெறுநர் குழுவின் முன்னனுமதி பெறப்படாத நிறுவனங்கள் எவையும் இவ் ஆலய சுற்றாடலில் வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.**

**பெறுநர் குழு,**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.**

(C-6099)



## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

**தேசிய தொழில்தகைமை (NVQ) சான்றிதழ் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்-2023**

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நெறிகள். க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தேசிய தொழில்தகைமை மூலம் பட்டதாரி ஆகும் வாய்ப்பு.

**விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்**

**Diploma in Agricultural Production technology (NVQ 5 and 6)**
**ஆங்கிலமொழி மூலம் / English medium**

**பயிற்சி நெறிக்காலம்**
ஒன்று / இரண்டு வருடங்கள் (ஆறுமாதம் / ஒரு வருட கால தொழிற்பயிற்சியுடன்)

**அனுமதி பெறுவதற்கான தகைமைகள்:**
க.பொ.த ( சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்.கணிதம். விஞ்ஞானம். ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடையந்திருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த(உ/த) பரீட்சையில் உயிரியல்/ தொழில்நுட்பவியல் / ஏதேனும் ஒரு பாடத்துறையில் கல்வி பயின்று விவசாயப்பாடத்தினை கற்று அப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

**அல்லது**

தேசிய தொழில்சார் தகைமை **(NVQ Level-04)** பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று சான்றிதழைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ். கணிதம். விஞ்ஞானம். ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். க.பொ.த (சா/ த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழி அறிவு (க.பொ.த.(சா/த) / சமமான ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை)

**வயது எல்லை**
விண்ணப்பதாரிகள் 18 வயது தொடக்கம் 35 வயது வரை
தங்களின் சுயவிபரக் கோவையுடன் அனைத்து விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ 15.03.2023 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பம் எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும். நேர்முகத்தேர்விற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் சுயவிபரக்கோவையில் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு/மின்னஞ்சல் முகவரிக்கு அது தொடர்பாக தெரியப்படுத்தப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்புவதற்கு/மேலதிக தகவல்களுக்கு**

**அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம்.**
**தொலைபேசி: 021 224 1420**
**மின்னஞ்சல்** -jcinstituteofagriculture@gmail.com

(5776)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா:சூரி 7 செவ் 4 இல்<br>உயரம்: 176 cm<br>தகைமை/தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம்<br>தொ.இ: B/13374 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 22 ½ சூரி , செவ் 2 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/13380 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 30 ½ சூரி 9 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/13379 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: சூரி 8 செவ் 4 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: ACCA,BSc in Applied Accounting (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: படித்த மாப்பிள்ளை<br>தொ.இ: G/13445 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 21 ¾ சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: ICT Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆங்கில அறிவு<br>தொ.இ: B/13381 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 162 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது சொந்த வியாபாரம்<br>தொ.இ: G/13446 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 16 சூரி 1 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: உயர்தரம் (மாகாண சபை சாரதி)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13383 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 23 சூரி 11 செவ் 4 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: BE(Hons) Engineer Computer Science IT Engineer (கனடா)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/13447 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருட யுத்தத்திற்கு பின்னர் ரஷ்ய வசமாகவுள்ளது பக்முத் நகர்

(கீவ்)

**உக்ரைன் மீது ரஷ்யா தொடங்கிய போர் ஒரு ஆண்டை கடந்து நீடித்து கொண்டு இருக்கிறது. இதில் உக்ரைனின் சில நகரங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. குறிப்பாக கிழக்கு உக்ரைனை முழுமையாக தன்வசப்படுத்த ரஷ்யா முயற்சித்து வருகிறது.**

டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள பக்முத் நகரை கைப்பற்ற ரஷ்யப் படைகள் தீவிர தாக்குதலை நடத்தி வருகின்றன. அதை எதிர்த்து உக்ரைன் இராணுவமும் சண்டையிட்டு வருகிறது.



பக்முத் நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய கடுமையான தாக்குதல்களால் அந்நகரம் முற்றிலும் அழிந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்தது.

இந்த நிலையில் பக்முத் நகரை முழுமையாக கைப்பற்றுவதில் ரஷ்யப் படைகள் மிக நெருக்கத்தில் உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

பல மாத சண்டைக்கு பிறகு பக்முத் நகரம், ரஷ்யா வசம் செல்லும் நிலையில் உள்ளதாகவும் அந்நகரத்தின் பெரும்பாலான பகுதிகளை ரஷ்யா கைப்பற்றி விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக ரஷ்யாவின் வாக்னர் தலைவர் கூறும்போது, பக்முத் நகர் கிட்டத்தட்ட முழுமையாக ரஷ்யப் படைகளால் சூழப்பட்டுள்ளது. அங்கு ஒரு சாலை மட்டுமே உக்ரைன் இராணுவத்துக்காக திறந்து இருக்கிறது என்றார். (4)

## கால்பந்து வீரர் மெஸ்ஸியை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு

### கொலை மிரட்டலும் விடுப்பு



(பேனோஸ் ஏயர்ஸ்)

ஆர்ஜென்டினாவில் மெஸ்ஸியின் குடும்பத்திற்கு சொந்தமான பல்பொருள் அங்காடியில் மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து கால்பந்தாட்ட ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸிக்கு பயங்கர அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவின் ரொசாரியோவில் உள்ள லியோனல் மெஸ்ஸியின் மனைவியின் குடும்பத்துக்குச் சொந்தமான பல்பொருள் அங்காடியில் கடந்த வியாழக்கிழமை அதி காலை இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் மெஸ்ஸிக்கு கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் ஒரு செய்தியை விட்டுச் சென்றுள்ளனர்.

அதில், "மெஸ்ஸி, உனக்காகக் தான் காத்திருக்கிறோம். ஜாவ்கின் ஒரு நார்கோ, அவர் உன்னை பாதுகாக்க மாட்டார்" என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தச் செய்தியில் ஜாவ்கின் என்பது மெஸ்ஸியின் சொந்த ஊரான ரொசாரியோ நகரின் மேயர் பாப்லோ ஜாவ்கின் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## எரிபொருள் சேமிப்பு கிடங்கு தீப்பற்றியதில் 16 பேர் பலி



(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் தெற்கு பபுவா மாகாணம் தனஹ்மெர்கா என்ற பகுதியில் அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய எரிபொருள் சேமிப்பு கிடங்கு உள்ளது. இந்தோனேசியாவின் ஒட்டு மொத்த எரிபொருள் தேவையில் 25 சதவிகிதம் இங்கிருந்து தான் விநியோகிக்கப்படுகிறது. இந்நிலையில், இந்த சேமிப்பு கிடங்கில் நேற்று முன்தினம் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த கோர தீ விபத்தில் சேமிப்பு கிடங்கில் இருந்த எரிபொருள் தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.

மேலும், 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து 52 வாகனங்களில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற 250 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். (4)

## அமெரிக்காவில் நடுவானில் குலுங்கிய விமானம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 469 பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு விமானம் ஜேர்மனிக்கு புறப்பட்டது. கிளம்பிய சிறிது நேரத்துக்கு பிறகு நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது விமானம் திடீரென பயங்கரமாக குலுங்கியது.

இதில் பயணிகள் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். பயணிகள் அனைவரும் பயத்தில் கூச்சலிட்டனர். விமானம் குலுங்கியதில் 7 பேர் படுகாயம் அடைந்தனர். சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதனால் விமானத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து வர்ஜீனியா மாகாணத்தில் உள்ள விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

அங்கு தயாராக இருந்த மீட்புக் குழுவினர் விரைந்து வந்து பயணிகள் அனைவரையும் பத்திரமாக வெளியேற்றினர். (4)

## கொரோனா தடுப்பூசியை உருவாக்கிய ரஷ்ய விஞ்ஞானி படுகொலை

(மொஸ்கோ)



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில், நாட்டின் முக்கிய விஞ்ஞானி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் கொலை வழக்கு விசாரணைக்கு என ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்ட விஞ்ஞானி, ரஷ்யாவின் Sputnik V கொரோனா தடுப்பூசியை உருவாக்கியவர்களில் ஒருவரான Andrey Boti kov என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 இல் Sput nik V கொரோனா தடுப்பூசியை உருவாக்குவதில் மொத்தம் 18 விஞ்ஞானிகள் ஈடுபட்டிருந்தனர். அதில் ஒருவர் தான் கொல்லப் பட்ட Andrey Botikov. வடமேற்கு மொஸ்கோவில் அமைந்துள்ள தமது குடியிருப்பில் வைத்து, கழுத்தை நெரித்து அவர் கொல்லப்பட்டு ள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தற்போது விஞ்ஞானி Andrey Botikov. கொலை வழக்கில் 29 வயதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவ இடத்தில் இருந்து தப்ப முயன்ற அந்த நபரை துரித நடவடிக்கையால் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் அவர் மீது கொலை வழக்கும் பதியப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயற்சி செய். உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடு.

– ஹோம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆர்ப்பாட்டத்தைத் தடுக்க ஜனாதிபதி ரணில் ஏவும் நாகாஸ்திரம்

போர் எங்கு நடந்தாலும் அந்தப் போரில் உச்சமான ஓர் அஸ்திரம் கையில் எடுக்கப்படும்.

அந்தவகையில், தற்போது எங்கு யுத்தம் நடந்தாலும் அணு ஆயுதத்தை வைத்து அதட்டுகின்ற நடைமுறை உண்டு.

இதுபோல பாரதப் போரில் கர்ணனின் கையில் இருந்த நாகாஸ்திரம் கண்ண பரமாத்மா உள்ளிட்ட அத்தனை பேரையும் கதிகலங்க வைத்தது.

இவ்வாறாகப் போரில் அதி உச்சமான ஆயுதம், அந்தப் போரின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதாக அமையும்.

இதுபோரில் மட்டுமல்ல, அரசியல் வியூகங்களின்போதும் தேர்தல் பிரசாரங்களிலும் ஆட்சியைத் தக்கவைப்பதற்கும் உச்சமான அஸ்திரங்கள் பயன்படுத்தப்படுவது உலகறிந்த உண்மை.

ஆம், கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, சஜித் பிரேமதாஸவுக்கு வெற்றிக்கான வாய்ப்பு இருந்தது.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ தரப்பு அதனை வீழ்த்துவதற்காக சஜித் பிரேமதாஸவுக்கும் தமிழ்த் தரப்புகளுக்குமிடையே உடன்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வெற்றி பெற்றால், இந்த நாட்டில் மீண்டும் விடுதலைப் புலிகள் வந்துவிடுவர் என்பதுமான பிரசாரத்தை நாகாஸ்திரமாக ஏவ, அது சஜித் பிரேமதாஸவைக் கண்டபாட்டில் தாக்கி ஜனாதிபதித் தேர்தலில் அவரைத் தோல்வியடையச் செய்தது.

இதுபோல தமிழர் தரப்புகளிலும் குறித்த கட்சிக்கு ஆளுந்தரப்புடன் தொடர்பு உண்டென்ற பிரசார அஸ்திரத்தைப் பயன்படுத்தி வெற்றியைத் தமதாக்கிக் கொள்கின்ற நடைமுறை வழமையானது.

இந்தவகையில் இப்போது ஜனாதிபதி ரணிலின் ஆட்சிக்கு எதிராக தென்பகுதியில் மக்கள் புரட்சி வெடிப்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

அதன் முதற்கட்டமாக தொழிற்சங்கப் போராட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ளன.

இந்நிலைமையானது, ராஜபக்ஷ தரப்புக்கு ஏற்பட்ட கதியைத் தனக்கும் ஏற்படுத்தும் என ஊகித்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவசர அவசரமாக நாகாஸ்திரமொன்றைக் கையிலெடுத்துள்ளார்.

அந்த நாகாஸ்திரம் ஏலவே ராஜபக்ஷ தரப்பு கையிலெடுத்த அஸ்திரம் என்பதுதான் உண்மை.

ஆம், நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் – மக்கள் புரட்சி வெடித்தால் அது ஒற்றையாட்சிக்கு ஆபத்தாகிவிடும் என்பதே ஜனாதிபதி ரணில் ஏவியுள்ள நாகாஸ்திரமாகும்.

அதாவது சிங்கள மக்கள் புரட்சியில் – போராட்டத்தில் ஈடுபட்டால், தமிழர்கள் நாட்டைப் பிரித்து விடுவார்கள் என்பதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏவியுள்ள அஸ்திரமாகும்.

இதனையே அவர்; ஒற்றையாட்சிக்கு ஆபத்து என உட்பொருள் கொண்டு கூறியுள்ளார்.

இப்போது நிலைமை என்ன என்பதை நம் தமிழ் மக்கள் புரிந்து கொள்வர்.

# திருகோணமலை எண்ணெய்த் தாங்கி கட்டமைப்பை மீண்டும் செயற்படுத்துக

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

திருகோணமலை எண்ணெய்த் தாங்கி கட்டமைப்பை மீண்டும் செயற்படுத்தி தேசிய பொருளாதாரத்துடன் இணைப்பதற்கான துரித வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் வளாகம், இந்தியன் ஒயில் நிறுவன எண்ணெய்த் தாங்கிகள் மற்றும் களஞ்சிய முனையத்திற்கு நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்த போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

பல தசாப்தங்களாக பயன்படுத்தப்படாத திருகோணமலை எண்ணெய்த்தாங்கிக் கட்டமைப்பை நவீனமயப்படுத்தி, திருகோணமலை அபிவிருத்தி வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலை இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எண்ணெய் தாங்கிகள் மற்றும் களஞ்சிய முனையத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை IOC முகாமைத்துவ பணிப்பாளர் மனோஜ் குப்தா வரவேற்றதுடன், இந்தியன் ஒயில் நிறுவனத்தின் மசகு எண்ணெய் கலக்கும் ஆலையையும் ஜனாதிபதி பார்வையிட்டுள்ளார்.

எண்ணெய் களஞ்சிய முனையத்தில் அமைந்துள்ள அதிநவீன ஆய்வு கூடத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி, அதன் செயற்பாடுகளை பார்வையிட்டதுடன், அண்மையில் மேம்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது உள்நாட்டு கிரீஸ் உற்பத்தி ஆலையையும் பார்வையிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வருடாந்தம் 3,000 மெட்ரிக் தொன் கொள்ளளவைக் கொண்ட இந்த கிரீஸ் உற்பத்தி ஆலையானது நாட்டின் மொத்த கிரீஸ் தேவையையும் பூர்த்தி செய்யும் என்பதோடு, தற்போது கிரீஸ் இறக்குமதிக்காக செலவிடப்படும் அந்நியச்செலாவணியை சேமிக்கும் திறனையும் கொண்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் நெருக்கடியான காலப்பகுதியில் நாட்டிற்கான எரிபொருள் விநியோகத்தை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்ல இந்தியன் ஒயில் நிறுவனம் மேற்கொண்ட அர்ப்பணிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# சமுர்த்தி வங்கியில் நிதி மோசடி

## உத்தியோகத்தர் உட்பட நால்வர் கைதாகி மறியல்

சமுர்த்தி வங்கியொன்றின் வைப்பாளர்களின் ஒன்பது கோடியே 25 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாரம்மல பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி வங்கி ஒன்றில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட ஏனைய சந்தேகநபர்களில் பணி நீக்கம் செய்யப்பட்ட சமுர்த்தி வங்கி முகாமையாளரும் இரண்டு வர்த்தகர்களும் அடங்குவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த சமுர்த்தி வங்கியின் வைப்பாளர்களுக்கு கடன் வழங்கும் வகையில் போலி ஆவணங்களை தயாரித்து இந்த நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் படி சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட சந்தேகநபர்கள் நால்வரும் நேற்று ஹெரொம்பாவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

48 முதல் 56 வயதுக்கு இடைப்பட்ட இந்த சந்தேகநபர்கள் குளியாபிட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# தேயிலைத் தோட்டத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

புஸ்ஸல்லாவ சோகமாவத்த பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

119 பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கு கிடைத்த தகவலின் படி சம்பவம் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பெண் ஹெல்பொட, கட்டுகிதுல பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய திருமணமான பெண் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது கொலையா, தற்கொலையா அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் ஏற்பட்ட மரணமா என்பது தொடர்பில் புஸ்ஸல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# லிட்ரோ காஸ் விலை இன்று திருத்தம்

லிட்ரோகாஸ் விலை இன்று நள்ளிரவு முதல் திருத்தம் செய்யப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதிதபீரிஸ் தெரிவித்துள்ளார்.

விலை ஏறினாலும் சரி, குறைந்தாலும் அது பெரிய தொகையாக இருக்காது எனவும் இதுவரை இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டொலரின் பெறுமதி வீழ்ச்சியின் பயனை மக்களுக்கு வழங்குவேன் என நம்புவதாகத் தெரிவித்த முதிதபீரிஸ், இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-7)

# எழுத்தாளர் தாட்சாயணியின் கௌரவிப்பு நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளரும் சங்கானை பிரதேச செயலாளருமான தாட்சாயணிக்கான (திருமதி. பிரேமினி பொன்னம்பலம்) கௌரவிப்பு நிகழ்வு இன்று 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அரங்கத்தில் நூலக நிறுவுனர் வள்ளியம்மை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# மார்ச் 20 ஆம் திகதிக்கு முன் தேர்தல் நடத்த வேண்டும்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தேர்தலுக்கான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என திறைசேரி மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு முறைப்பாடு செய்திருந்த நிலையில், தற்போது உயர் நீதிமன்ற உத்தரவு கிடைத்திருப்பதால், மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னதாக தேர்தல் திகதி குறிக்கப்பட வேண்டும் என சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சட்டத்தின் படி, மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆகவே, சட்டத்திற்கு இணங்க தேர்தலை நடத்துவதாக இருந்தால், மார்ச் 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வை தடுத்து நிறுத்த சென்ற அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்



(மன்னார்)


மன்னார் மாந்தை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஆத்திமோட்டை பகுதியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி, அடாத்தாக பிடிக்கப்பட்டு பாரிய அளவு காடுகள் அழிக்கப்பட்டு அனுமதி இன்றி மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளது

இந்த நிலையில் கிராம மக்களின் முறைப்பாட்டை தொடர்ந்து மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் உட்பட்ட குழுவினர் மணல் அகழ்வை நிறுத்துவதற்காக சென்ற நிலையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்கள் அவர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்தில் மன்னார் இலுப்பைகடவை பொலிஸார் பிரசன்னமாகியிருந்த போதும் சம்பந்தப்பட்ட நபர் மீதோ சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் மீதோ எந்த சட்ட நடவடிக்கையோ கைது நடவடிக்கையோ மேற்கொள்ளவில்லை என்பதுடன் மணல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்களை கையகப்படுத்த கூட பொலிஸார் முன்வரவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய அனுமதி இன்றி காடுகள் பல மாதங்களாக அழிக்கப்பட்டுள்ளதுடன் அரச காணியில் மணல் அகழ்வும் இடம்பெற்றுள்ள நிலையில் இலுப்பைகடவை பொலிஸாரோ வனவள திணைக்களமோ எந்தவிதமான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (4-6-285)

# கிளிநொச்சியில் மாடுகளுக்கு பெரியம்மை நோய்த் தாக்கம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு பெரியம்மை என்று சொல்லப்படுகின்ற இலம்பி நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி ,இயக்கச்சி, பளை, உருத்திரபுரம் போன்ற பகுதிகளிலும் இதன் தாக்கம் பரவியுள்ளது.

பூநகரி பகுதியில் இதன் தாக்கம் வேகமாக பரவி வருகிறது. எனவே குறித்த நோய்களுக்கான அறிகுறிகள் தென்படுமாயின் அருகில் உள்ள கால்நடை மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-316)

# பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பொதுச்சந்தை மீள ஆரம்பம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் 19 ஆம் கட்டை பொதுச் சந்தை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட 19 ஆம் கட்டை பொதுச்சந்தையானது செயல் இழந்த நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த முதலாம் திகதி பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இறைச்சி விற்பனை, மீன்விற்பனை, மரக்கறிவகைகள், பழவகைகள் என்பவை உடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# மட்டக்களப்பில் ஆறு பேரில் ஒருவருக்கு புற்றுநோய் அபாயம்

(ஏறாவூர்)


மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பேருக்கு ஒருவர் புற்றுநோயினால் பாதிக்கப்படும் நிலைமை காணப்படுவதாக இலங்கை புற்றுநோய் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் மருத்துவ நிபுணருமான டாக்டர் கே.கருணாகரன் தெரிவித்துள்ளார்.

தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் புற்றுநோய் தொடர்பான மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் இலங்கையில் ஏற்படும் மரணங்களில் முதல் இடத்தினை புற்றுநோய் கொண்டிருக்கும் நிலையேற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் புற்றுநோய்க்கான மருந்துகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பாரிய சவாலை எதிர்கொண்டுள்ள நிலையில், இவ்வாறான விழிப்புணர்வுகள் மூலம் தொற்று நோயின் தாக்கம் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வு பெறவேண்டியது கட்டாயம் எனவும் அவர் குறிப்பிட்டார். (4)

# ஐயன்கன் குளத்தினை புனரமைத்து தருமாறு வடமாகாண ஆளுநருக்கு கடிதம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு ஐயன்கன் குளத்தினை புனரமைத்துத் தருமாறு ஐயன்கன்குளம் கமக்கார அமைப்பு வடமாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முல்லைத்தீவு ஐயன்கன் குளமானது பல காலமாக புனரமைப்பு வேலைகள் இடம்பெறாததன் காரணமாக குளமானது சேதமடைந்து காணப்படுகின்றது.

விவசாயிகளாகிய நாங்கள் ஒவ்வொரு மழைக்காலத்திலும் மண் மூடைகளை அடுக்கி குளத்தினை பாதுகாத்து வருகின்றோம்.

அத்துடன் குள வாய்க்கால்கள், குள வீதிகள் என்பன மிக சேதமடைந்து காணப்படுகின்றன.

வயலுக்கு நீரை பாய்ச்சவும் வயலில் இருந்து நெல் மூடைகளை எடுத்து வரவும் மிகவும் சிரமமாக உள்ளது. அதிகளவு பணத்தினையும் செலவு செய்கின்றோம்.

இதன் காரணமாக விவசாயிகள் பலர் விவசாயத்தினை கைவிடும் நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் குள வேலைகளை செய்து தருமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் பலமுறை நாம் கோரிக்கை விட்ட போதும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் குளமானது SIAP திட்டத்தின் கீழ் குள வேலைகள் உள்வாங்கப்பட்டதன் காரணமாக அதன் கீழ் குள வேலைகளை செய்து தரலாம் என 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கூறி வருவதுடன் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் உதாசீனம் செய்வது எமக்கு மனவேதனையை அளிக்கின்றது.

எனவே இவ்விடயத்தில் தாங்கள் தலையிட்டு எமது குள வேலைகளை எமது நியாயமான கோரிக்கைகளை இவ் வருடமாவது நிறைவேற்றித் தர தாங்களைத் தயவுடன் வேண்டுகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-350)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 240 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 350 |
| தக்காளி | 80 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 80 | 120 |
| கரட் | 100 | 180 | 140-200 | 240 |
| பூசணி | 80 | 70 | 60 | 80 |
| புடோல் | 180 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 130 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 500 | 600 |
| வெண்டிக்காய் | 350 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 300 |
| கறிமிளகாய் | 450 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1500 | 1500 |
| போஞ்சி | 240 | 250 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 130 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 120 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 200 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 160 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடியில்...

சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டநேரமாகியும் வாகனம் திரும்பி வராத நிலையில் தான் ஏமாந்து விட்டதனை உணர்ந்த உரிமையாளர் இது தொடர்பாக பொலிஸாருக்கு தொலைபேசி வாயிலாக தெரியப்படுத்திய நிலையில் பொலிஸார் ஹயஸ் வாகனத்தை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-7,30)

## இரு நாட்டு...

அலி சப்ரிக்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பானது, ஹைதராபாத் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பின்போது, இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தமது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதார மீட்சியை எளிதாக்குவதற்கான ஒத்துழைப்பு குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முதலீடு, வர்த்தகம் மற்றும் கூட்டாண்மை மேம்பாடு குறித்தும் இருநாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பளை...

நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் தோண்டப்பட்ட குழியினுள் இருந்து வெடிபொருட்கள் சிலவற்றை மீட்டெடுத்துள்ளனர்.

இதில் 02 கைக்குண்டுகள் மற்றும் 175 தோட்டா ரவைகள், 01 மகசின் என்பன மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வெடிபொருட்கள்யுத்த காலத்தில் பயன்படுத்தியது எனவும் அவை செயலிழந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,100)

## இளம் பெண்...

கரவெட்டி கட்டுப்புலம் பகுதியில் இளம் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விபரீத முடிவெடுத்த நிலையிலேயே குறித்த பெண் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதடி வைத்தியசாலையில் பணிபுரிந்த சூரியகுமார் வாசுகி (வயது - 31) என்ற இளம் அரச உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் உடல்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## கச்சதீவு உற்சவம்...

அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நீண்டகாலத்தின் பின்னர் பெருமளவான இலங்கை - இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் வருடாந்த உற்சவத்திற்கான கொடியேற்ற வைபவம் சிறப்பாக இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதை ஆலயத்தை சுற்றி வலம் வரும் நிகழ்வும் இடம்பெற்றது.

இம்முறை வருடாந்த கச்சதீவு உற்சவத்திற்கு இலங்கை கடற்படை, இந்தியத் துணைத் தூதரகம், இலங்கையின் வெளிவிவகார அமைச்சு ஆகியன முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளதோடு உற்சவம் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. (ம-7)

## திகதி குறிப்...

தெரிவித்தார்.

பஃவ்ரல் அமைப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது இவ்வாறு கூறிய அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணைக்குழு தீர்மானிப்பதாக அறிவித்திருந்தது.

இருந்தபோதும் தேர்தல் முறையை மாற்றுவதற்கும் முயற்சிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திகதியின்றி ஒத்திவைப்பதற்கும் அவர்கள் எதிர்பார்க்கும் தேர்தல் வரும் வரை இந்த தேர்தலை பிற்போடுவதற்குமே அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது மிகவும் தெளிவாக தெரிகின்றது.

நாட்டின் ஜனநாயகத்தை இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் மோசமான முறையில் தலையீடு செய்து வரும் நிலையே தற்போது இருக்கிறது என்றார். (ம-7)

## நீதிமன்ற தீர்ப்பை...

தடுக்கும் வகையில், நிதி அமைச்சின் செயலாளருக்கும் நிதி அமைச்சர் சார்பில் சட்டமா அதிபருக்கும் உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.

தேர்தலுக்கான அச்சகப் பணிகளுக்கு தேவையான நிதியை வழங்காதிருக்கும் நிதி அமைச்சின் செயற்பாட்டிற்கும் உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இது தொடர்பான ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்வியின்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## ஏப்ரலில் தேர்தல்...

முழுமையாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு எதிர்வரும் ஏப்ரல்மாதம் 07 அல்லது 08 ஆகிய தினங்களில் இடம்பெறும் என எதிர்பார்க்கிறோம். ஏப்ரல் மாதம் பண்டிகை காலம் என்பதால் தேர்தலை நடத்துவது சிக்கலைத் தோற்றுவிக்கும் என ஆளும் தரப்பினர் குறிப்பிடலாம்.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. ஆகவே பண்டிகைக்காலம் என்பது தேர்தல் நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாக அமையாது.

தேர்தல் இடம்பெறாது என்ற நம்பிக்கையில் பொதுஜன பெரமுனவினர் செயற்...

தேசிய அபிவிருத்தி லொத்தர்
லொத்தர் ரிக்கெட்டுக்களான மகாஜன சம்பத, ராசி அதிஷ்டம் மேலும் பல லொத்தர் ரிக்கெட்டுக்களை சைக்கிளில் அல்லது மோட்டார் சைக்கிளில் விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும் (14804)
077 603 1723

பாடுகளில் ஈடுபடாமல் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்த நிலையில் உள்ளார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறாது என்று குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை முழுமையாக பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளார் என்றார். (ம-7)

## மத்திய வங்கி...

வர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

பணவீக்க இலக்குகளை அடைவதில் இலங்கை மத்திய வங்கியின் அர்ப்பணிப்பை இது பிரதிபலிக்கிறது என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1504
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 3 4 0 2 2 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2023.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 1079
S 24 30 49 59
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 3291
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
A 11 22 32 47
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1397
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
N 13 08 15 30 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 358
மிதுனம் 15 21 29 34 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 5049
B 9 5 8 6 4 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2024
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.04
தினம் சனிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,823,440/-
A 25 26 46 49
DLB

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.04
சீட்டிழுப்பு இல : 4185
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,423,740/-
வெற்றி இலக்கங்கள் 09 28 34 73
ஆங்கில எழுத்து R
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,213,724/-
திகதி 2023-03-04
வெற்றி வாரம் 3736
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 18 20 24 36 மிதுனம்
6932 230
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,282,984/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 27 30 51 53 68
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1200
வர்ணம் சிவப்பு
திகதி 2023.03.04 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 310,760,108.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 576
திகதி 2023-03-04
வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 40 66 69
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,706,204/-
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1850
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.03.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,568,440/-
வெற்றி இலக்கங்கள் 11 36 40 52
ஆங்கில எழுத்து B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

JAPPAN YAMAHA டீசல் ஜனரேட்டர் விற்பனைக்குண்டு 9KV சிறிது காலம் பாவிக்கப்பட்டது.

தொடர்புக்கு :-
**077 734 4074**
**075 039 6176** (14790)

## வீடு வாடகைக்கு

அண்மையில் ஓய்வு பெற்ற பௌதிகவியல் பட்டதாரி ஆசிரியருக்கு 750 மார்க்கத்திற்கு அண்மையில் 3 அறைகளுடைய வீடு வாடகைக்கு தேவை. தனிப்பட்ட குழு வகுப்புக்களுக்கும் தொடர்புகொள்ள.

**077 600 4896** (14797)


## உடனடி வேலை வாய்ப்பு

நிரந்தர வேலை வாய்ப்பை தேடுவோருக்கான ஒரு சந்தர்ப்பம். எமது H.R நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு அலுவலக உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள், சந்தைப்படுத்தல் உதவியாளர்கள் போன்ற நிரந்தரமான பதவிகளுக்கு நபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளது. ஒவ்வொரு பதவிகளுக்கும் 1 - 3 மாதம் பயிற்சி வழங்கப்படும். உங்கள் தகைமைகளுக்கேற்ப பதவிகள் வழங்கப்படும். பயிற்சியின் போது 25,000 - 35,000 பயிற்சியின் பின்னர் 45,000 - 75,000 வரையில் சம்பளம் பெற்றுக்கொள்ள முடியும்.

**(முன் அனுபவம் தேவையில்லை)** (14800)

தொடர்புகளுக்கு : **077 985 8580 | 077 202 5118**

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 21 . 03 . 1946

மறைவு 04 . 02 . 2023

கடந்த 04.02.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

(முன்னாள் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் (A.G.M) இலங்கை வங்கி, பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் – தமிழ்த் தேசிய முன்னணி)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 06.03.2023 திங்கட்கிழமை அதிகாலை 5:00 மணியளவில் வியாபாரிமூலை தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்புத் தந்தையின் மறைவுச் செய்தி அறிந்து எமது துயர் பகிர நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி, குறுஞ்செய்தி, இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள், கண்ணீர் அஞ்சலி, பிரசுரங்கள், பனர் பதாதைகள் மூலம் தெரிவித்தவர்களுக்கும் பல்வேறு வகைகளிலும் இன்று வரை எம்மோடு தோளோடு தோள் சேர்த்து கையோடு கைகோர்த்து நிற்கும் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு : இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

செட்டித்தெரு, பருத்தித்துறை.
077 548 7200 (C-6102)

அன்புடன்
குடும்பத்தினர்

## O/L 2022 தீபம் கல்வி நிலையம்

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர்களுக்கான மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்
**(Revision Paper Class)**
நடைபெறுகின்றன.

தமிழ் மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | திரு.B.கமல் | திங்கள் | மாலை 6.00 - 7.30 |
| கணிதம் | திரு.G.உஷானந்தன் | புதன் | மாலை 6.00 - 7.30 |
| தமிழ் | தமிழ்சுடர் திரு.க.மு.நித்தி | வியாழன் | மாலை 6.00 - 7.30 |
| வரலாறு | திரு.K.கலைச்சந்திரன் | வெள்ளி | மாலை 6.00 - 7.30 |
| விஞ்ஞானம் | திரு.S.கோபிநாத் | சனி | மாலை 6.00 - 7.30 |

ஆங்கில மொழி மூலம்

| | | | |
|---|---|---|---|
| Maths | MR.M.Nishan | Wed | 6.00 - 7.30 Pm |
| Science | MR.S.Kobinath | Sun | 6.00 - 7.30 Pm |

- ஆர்வம் உள்ள வெளி மாணவர்கள் கலந்து கொள்ள முடியும்.
- தனிப்பாட அனுமதி உண்டு.
- தரம் 10இன் அலகுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படும்.
- தரம் 10இன் அலகுகளை பரீட்சிப்பதற்கு ஒவ்வொரு வெள்ளியும் நிலை அறிவுப் பரீட்சை நடைபெறும்.
- அலகு ரீதியாக கடந்த கால வினாத்தாள்கள் (Past Paper) மீட்டல் செய்யப்படும்.
- கட்டண விபரங்களுக்கும் முற்பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:- **077 224 7781**

'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்' (14803)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
076 097 3127

## தனா பியூட்டி பஷன்

அழகுக்கலை வகுப்புக்கள் தனியாக மற்றும் குழுவாக நடைபெறுகின்றன. ஆர்வமுள்ளவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு
**077 601 8563**
No.101, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (14699)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14788)

**076 435 0614, 077 638 5683**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14788)

**076 465 0171, 076 911 9371**

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6105) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## தீபம் யாழ்நகர்

இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம் (கலைக் கோட்டம் அருகில்)

(14803)

**Day Batch**

**வர்த்தகம்** ஆரம்பம் 08.03.2023 புதன்கிழமை மாலை 4.00 மணி

பொருளியல் - M.லிஜிதன் | கணக்கீடு - V.தமிழ்ஈசன்
வணிகக்கல்வி - V.கோபிதன் 077 224 7781 -நிர்வாகம்

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(147739)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6105)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## Pearl Island Inn Hotel & Restaurant

Dine - in | Take Away
Cool Bar

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன் உயர்தரம் வாய்ந்த தங்கும் இடவசதிகளுடன் (Rooms) மற்றும் உலக தரம்வாய்ந்த யாழ், இந்திய, சைனீஸ், மொங்கோலியன் உணவு வகைகள் மற்றும் குளிர்பானங்களை இங்கிருந்தும் உங்கள் வீடுகளிற்கு எடுத்து சென்றும் சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைந்திடுவீர்.

தொடர்புகளுக்கு :
077 002 2088
021 222 2678
www.pearlislandinn.com
No.603, Hospital Road, Jaffna.

உங்கள்
S.Ubesegaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn குழுமம்






(C-6103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.